விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆடி 20 ஜுலை 6 இதழ் 171
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 4-8-84

## யாழ். அரசாங்க செயலகத்தில் தமிழ்மொழி அமுலாக்கல் குறித்து ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரசாங்க செயலகத்தின் அலுவல்கள் அனைத்தும் தமிழில் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பது பற்றி கடந்த 27-7-84 இல் பதில் அரசாங்க அதிபரான திரு. மு. பஞ்சலிங்கம் தலைமையில் ஆராயப்பட்டது. இக்கூட்டத்தில் மேலதிக அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர்கள், ஏனைய திணைக்கள பதவி உத்தியோகத்தர்கள் கிளைத்தலைவர்கள் அனைவரும் பங்குபற்றினர். கூட்டத்தை ஆரம்பித்து வைத்த மேலதிக அரசாங்க அதிபர் உதவி அரசாங்க அதிபர்களுக்கு சுற்றுநிருபத்தில் அடங்கிய சில கருத்துக்களை விளக்கி, தமிழ்மொழி அமுலாக்கல் துரிதமாக நடைமுறைப்படுத்த வேண்டுமெனச் சுட்டிக்காட்டினர்.

இவ்விடயம் விரிவாக இக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

(8-ம் பக்கம் பார்க்க)

# சென்னை விமானநிலைய கோரச்சம்பவம்:

# மாண்டவர் தொகை 24!

## சர்வதேசப் போக்குவரத்தும் தடையானது!

### சம்பவத்துக்கு முன்னர் ஒலித்த அனுமதேய தொலைபேசிக்குரல் யாருடையது?

### முழுஅளவில் பூரணவிசாரணை நடைபெறுகிறது

(சென்னை)

**சென்னை மீனம்பாக்கம் விமானநிலையத்தில் நேற்றுமுன்தினமிரவு 10-52 மணிக்கு இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் பலியானவர் தொகை 24ஆக அதிகரித்துள்ளது. இச் சம்பவத்தில் 23 பேர் காயமடைந்துள்ளனர் காயமடைந்தவர்களில் 3 பேர் சென்னை மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுவருகிறார்கள். இவர்களில் 3 பேரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.**

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திலுள்ள வெளிநாட்டுப் பயணிகள் வந்திறங்கும் அறையிலேயே இக் குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

குற்றவாளி யாரென்பது இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை.

குண்டு வெடிப்பதற்கு சுமார் 4 மணிநேரம் முன்னதாக இலங்கையிலிருந்து விமானமொன்று வந்திறங்கியது. அது மீண்டும் ஒரு மணி நேரத்திற்குப்பின்னர் இலங்கைக்குப் புறப்பட்டுச் சென்றது. அந்த விமானத்தில் பயணம் செய்வதற்காக ஒருவர் இடத்தைப் பதிவு செய்திருந்தார். அவர் விமானத்தில் ஏறுவதற்கான அட்டையை வாங்கிக்கொண்டு 2 பெட்டிகளை அதிகாரிகளிடம் ஒப்படைத்திருந்தார். இப் பெட்டிகளுக்குச் செலுத்த வேண்டிய கட்டணத்தையும் செலுத்தியிருந்தார். ஆனால் இறுதியில் அவர் அந்த விமானத்தில் பயணம்செய்யவில்லை

கேட்பாரற்றுக் கிடந்த அந்தப் பெட்டிகளைப் பரிசோதனை செய்வதற்காக சுங்க இலாகா அதிகாரிகள் தமது அறைக்கு எடுத்துச்சென்றனர். அங்குஇரு குண்டுகள் வெடித்திருக்கக் கூடுமென்று தெரிவிக்கப்பட்டது. ஒருவரின் தலை சுமார் 125 மீட்டர் தூரத்திற்கு தள்ளிப்போய் விழுமளவிற்கு வெடிவிபத்துவேகம் இருந்ததென்று தமிழ் நாடு தலைமைச் செயலாளர் திரு. கே. சொக்கலிங்கம் தெரிவித்தார்,

### விமானப் போக்குவரத்து நிறுத்தம்

இந்தவெடி விபத்தையடுத்து சென்னை மீனம் பாக்கம் விமானநிலையத்தில் சர்வதேச விமானப்போக்கு வரத்து தற்காலிகமாக நிறுத்திவைக்கப் பட்டுள்ளது.

உள்ளூர் விமானப் போக்கு வரத்து தடையின்றி நடை

(8-ம் பக்கம் பார்க்க)

## எரிபொருள் நிலையங்களில் கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

இரு எரிபொருள் நிலையங்கள் துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 11-30 மணியளவில் இக் கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

கொடிகாமம் எரிபொருள் நிலையத்தில் 6,212 ரூபாவும் சாவகச்சேரியிலுள்ள தனியார் எரிபொருள் நிலையத்தில் 2,212 ரூபாவும் கொள்ளையடிக்கப்பட்டதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

ஒரு மோட்டார் சைக்கிளில் சென்ற இரு நபர்களே துப்பாக்கி முனையில் அடுத்தடுத்து இரு எரிபொருள் நிலையங்களிலும் இருந்தவர்களை பயமுறுத்தி கொள்ளையடித்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## நல்லூர் உற்சவம்; வீதி ஒழுங்குமுறை

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் திருவிழாக் காலங்களில் வீதி ஒழுங்குமுறை பற்றிய மகாநாடு நடைபெற்றபோது, பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

யாழ்.மாநகரசபை ஆணையாளர் திரு சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் இம் மகாநாடு நடைபெற்றது.

''உற்சவம் ஆரம்பமான காலத்திலிருந்து இம்மாதம் 28-ம் திகதி நள்ளிரவு 12-00 மணிவரை போக்குவரத்திற்கு மூடப்பட வேண்டிய தெருக்கள் சம்பந்தமாகப் பொலிசாரால் புதினப் பத்திரிகைகளில் முறையாகப் பகிரங்கப் படுத்தப்படல் வேண்டும். பக்தர்களது வசதிக்காக கோவில் காணியின் ஓரமாகச் செல்லும் பின்வரும் தெருக்கள் வாகனப் போக்குவரத்திற்கு மூடிவிட தீர்மானிக்கப்பட்டது.

''அரசடிச் சந்திக்கும் 2ம் கட்டைத் தூணுக்கும் இடைப்படும் பருத்தித்துறை வீதியின் அப்பாகத்தை,

''சோமசுந்தரம் ஒழுங்கைக்கும், பண்டாரக்குளம் வீதிக் (சங்கிலியன் வீதி)கும் இடைப்படும், கோவில் வீதியின் அப்பாகத்தை;

(8ம் பக்கம் பார்க்க)

## பிரி- பிரதமர் இலங்கை விஜயம்

(கொழும்பு)

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மாக்கிரட்தட்சர் செப்டம்பர் மாதம் 15ம் திகதி முதல் ஒரு வார காலத்திற்கு இலங்கை, மலேசியா, சிங்கப்பூர். இந்தோனேஷியா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவரின் விஜயம் தொடர்பான முழுவிபரங்களும் இம் மாத பிற்பகுதியில் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

### யாழ். மாணவன் தினேஷ் உயிர்காக்கும் நிதி:

## "ஈழநாடு" உதவிச் செய்திக்கு

### யாழ். லயன்ஸ் கைகொடுக்கிறது!

(கே. ஜி. எம்.)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவன் தினேஷின் உயிரைப் பாதுகாக்க உதவிக் கரம் நீட்டுங்கள் என்ற 'ஈழநாடு' செய்தி, உடனடியாகவே பலனளித்துள்ளது!

சிறுநீரகம் இரண்டும் இயங்க முடியாதநிலையில் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் உயிருடன் போராடிக்கொண்டிருக்கும் பதினைந்து வயது யாழ். மாணவன் தினேஷ் சோமசுந்தரத்தின் உயிரைப்பாதுகாக்க பெருமஉள்ளம்கொண்ட வர்த்தக பிரமுகர்களும் சமூக சேவை ஸ்தாபனங்களும் முன்வருமா? என்று நேற்றைய 'ஈழநாடு' செய்தி வெளியிட்டிருந்தது. தெரிந்ததே.

நேற்றைய 'ஈழநாடு' பத்திரிகையைப் படித்து உள்ளம் உருகிய பலரில், துடிப்புள்ள முப்பது வயதுள்ள இளைஞன், சுண்டிக்குழியைச் சேர்ந்த அ மகேந்திரன், சுழியாக ஒரு ஐநூறுரூபா நோட்டைநேற்று அதிகாலையில் 'ஈழநாடு' அலுவலகத்துக்கு வந்து கொடுத்து தினேஷ் நிதியை ஆரம்பித்து வைத்துள்ளார்.

இவரின் 'பிள்ளையார் சுழி' யுடன், தினேஷ் நிதிஉடனடியாகவே ஆரம்பமானது.

நேற்றைய 'ஈழநாடு' செய்தி வெளியானதும் உடனடியாகத் தொடர்பு கொண்ட யாழ்ப்பாணம் பொதுஸ்தாபனம், யாழ். லயன்ஸ் கழகம்ஆகும்.

யாழ்.மாணவன் தினேஷ் உயிர்காக்கும் பணிக்கு உதவுவோர், யாழ். லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த 'லயன்' டாக்டர் எஸ். சபாரத்தினம், வேம்படி பொலிகிளினிக், முதலாம் குறுக்குத் தெரு,

(8ம் பக்கம் பார்க்க)

## வங்கிக் கட்டடத்தில் ஏற்பட்ட குண்டுவெடிப்பு!

### சேதம் அதிகமானபோதிலும் வங்கி அலுவலில் மாற்றமில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியிலுள்ள மக்கள் வங்கிக் கிளைக்கட்டிடத்தில் ஏற்பட்ட குண்டு வெடிப்பினால், வங்கி கட்டிடத்துக்குப் பலத்தசேதம் ஏற்பட்டுள்ளது.

இக்கட்டிடத்தில் ஏற்பட்ட சேதம் லட்ச ரூபாக்கணக்கில் இருக்கும் என்று வங்கி தலைமைக் காரியாலய உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இரவு 10-30 மணியளவில் குண்டு வெடிப்புச் சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகிறது.

இ குண்டுவெடித்த அதிர்ச்சியினால் யாழ் நகரில் மட்டுமின்றி, ஐந்துமைல் தூரத்திலுள்ள மக்கள் பெரும்பீதி அடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

நேற்று முன்தினம் இரவு 7-30 மணியளவில் ஸ்ரான்லி வீதியில் உள்ள மக்கள் வங்கிக் கிளையில் இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது, கடமையிலிருந்த வங்கி உதவிப் பாதுகாப்பு ஊழியர் மார்ட்டின் (47வயது) என்பவரும் தொலைபேசி இயக்குநர் வின்சன்ட் என்பவரும் காயங்ளுக்குள்ளாகி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். இதில் வில்சன் என்பவர் சிறுகாயங்களுக்குள்ளானதால் வைத்திய சிகிச்சையின் பின்னர் வெளியேறிவிட்டார்.

இச்சம்பவத்துக்குப் பின்னர் யாழ் பிரதான வீதியிலுள்ள மக்கள் வங்கி தலைமைக்காரியா

(8ம் பக்கம் பார்க்க)

## சின்னமடு செபமாலைமாதா உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் பிரசித்திபெற்ற கத்தோலிக்க யாத்திரிகர் ஸ்தலமான சரவணை சின்னமடு செபமாலை மாதா ஆலய வருடாந்த திருவிழா நாளை அதிகாலை நடைபெறும் திருப்பலியுடன் நிறைவுபெறும்.

கடந்த ஒருவாரமாக ஆலயத்தில் நடைபெற்றுவந்த நவநாள் மாலை ஆராதனைகள் இன்று மாலையுடன் நிறைவுபெறும். நாளை காலை திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

# அசி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலைமையில் உள்ள Pegeot Car 203 இல. 1 ஸ்ரீ 1569 விற்பனைக்குண்டு. விபரம்: S. பஞ்சலிங்கம் சட்டத்தரணி, புலோலி தெற்கு, மந்திகை. 1133

North town Chicks. Cross Broilers-4-50. சேவல் குஞ்சு-1-65, பேட்டுக்குஞ்சு வெள்ளை, சிவப்பு-8-75. நாலு நாள், கிழமைக்குஞ்சுகளும் ஓடருக்குக் கொடுக்கப்படும். தொடர்பு: ராதாகிஷ்ணஸ், 392, நாவலர் வீதி, கயிலாச பிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம். 1190

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் கண்டி றோட்டில் அரியாலை நெடுங்குளம் சந்திக்கு முன்பாக 1 1/2 பரப்பு தென்னங்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 115, A. V. Road, அரியாலை. 1141

கமறுக்கள் - றேடியோக்கள் - சகலவித தளபாடங்கள் - கார் சீற்கவர்கள் - அலுமாரிகள் - சைக்கிள்கள் - ICMA புத்தகங்கள் - கடிகாரவகைகள் - இன்னும் அநேக பொருட்கள். விபரங்களுக்கு முத்திரைக் கவருடன் விண்ணபிக்கவும்: கார்த்திகேசு, ஏல விற்பனை நிலையம், கோப்பாய். (1189)

வட்டுக்கோட்டை மேற்கில் பதிவாளரின் வீட்டிற்கும், சங்கக் கடைக்கும் அருகிலுள்ள 4¼ பரப்புக் காணியும், கிணற்றுடன் வீடும் உடன் விற்பனைக்குண்டு, வாடகைக்கும் விடப்படும். இ. சிற்சபேசன், தெ.ப.நோ. கூ. சங்கம், தெல்லிப்பழை அல்லது வி. கனகரத்தினம், இலகடி, மாவிட்டபுரம். (1213)

சகலவித பொருட்களும் ஒவ்வொரு நாளும் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. ஆனல் ஞாயிற்றுக்கிழமைகளிலும், போயா தினங்களிலும் அதி விசேஷ போட்டி விற்பனையில் மிகவும் மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம். விபரங்களுக்கு முத்திரைக் கவருடன் விண்ணப்பிக்கவும். கார்த்திகேசு, ஏலவிற்பனை நிலையம், கோப்பாய். (1210)

மல்லாகம் K.K.S. வீதிக்கு அருகாமையில் 4¼ பரப்பில் அமைந்த விசாலமான வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: P. இராசையா, டானியல் வாசம், கோயில் வீதி, (Church Lane), மல்லாகம். 1172

சித்தங்கேணி சந்தியிலிருந்து வட்டுக்கோட்டை றோட்டில் 400 யார்தூரத்தில் வீடுகட்டக் கூடிய 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. கூடியவிலை கேட்போருக்கு விற்கப்படும். தொடர்பு: V. A. பொன்னம்பலம், நவராஜா'ஸ் இன்ஸ்ரியூட், சித்தங்கேணி, 1194

மானிப்பாய், மருதனுமடம் பிரதானவீதியில் உடுவில்றேஸ் பிராண்ட் இனிப்புக் கொம்பனிக்கும் தற்போது புதிதாக அமைந்துள்ள அரிசி ஆலைக்கும் இடையில் 14 பரப்புக் காணி விற்பனைக்குண்டு தொடர்பு ஆ. நடராசா, ஈஞ்சடி வைரவர் கோவிலடி, தேவ பவனம், உடுவில் தெற்கு, மானிப்பாய். 1202

## விற்பனைக்கு

தஞ்சாவூர் வீணைகள் வந்து விட்டன. தேவையானவர்கள் தொடர்பு கொள்ளலாம். சி. கிருஷ்ணமூர்த்தி, அகில இலங்கைத் திருமுறை மன்றம், 31/12, சங்கிலியன் வீதி, நல்லூர் 1200

வசாவிளானில் 90 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: ..ணரட்டினம், 'புஸ்பவாசா', பத்தாவத்தை, இளவாலை. 1203

யாழ். வளாக(தபால்பெட்டி) லேனிலுள்ள 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பிரித்தும் கொடுக்கப்படும். தொடர்பு: லங்கா ரேடிங் அயன் வேக்ஸ், 71, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23856. (1197)

7மாதப் பாவிப்பிலுள்ள இருறலி திரிஸ் சுப்பர் M X 100 சைக்கிள் (Boys) விற்பனைக்குண்டு. நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். 115, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (றக்கா றோட் சந்தியில்). 1211

## தேவை

ஸ்ரான்லி வீதியிலுள்ள வியாபார ஸ்தாபனத்திற்கு அனுபவமும், கல்வித்தகைமையும் உள்ள முழுநேர கணக்கப்பிள்ளை தேவை. வயது 45க்கு மேல். 15-8-84க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். விளம்பர இல; 1199, C/o, ஈழநாடு, யாழ்ப்பாணம். 1199

வாடகைக்கு வீடு ஒன்று யாழ்ப்பாணம் ஒரு மைல் எல்லைக்குள் தேவைப்படுகின்றது. நான்கு அறை கொண்டதாகவும், மின்சாரம், பைப் வசதியுள்ளதாகவும் இருக்க வேண்டும். தொடர்புகொள்ளவும்: சீப்சைட், 7-8, நவீன சந்தை, (உட்புறம்), யாழ்ப்பாணம். 1177

யாழ். நகர் ஸ்ரான்லி வீதியிலுள்ள வர்த்தக நிறுவனமொன்றிற்கு பி. வி. சி. உபகரணங்கள் செய்வதில் அனுபவம் வாய்ந்த ஒருவர் உடன் தேவை. தகுதியானவர் மாதச் சம்பளமாக ரூபா 2000/- வரை எதிர்பார்க்கலாம், நாட்சம்பளமாகவோ, மாதச் சம்பளமாகவோ, நேரில் பேசித்தீர்மானிக்கலாம். கிராமசேவகரின் நற்சாட்சிப் பத்திரத்துடன் 8- 8- 84 க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம்:-1166, C/o, ஈழநாடு. (1166)

## பயிற்சி

விடுமுறை Badminton வகுப்புக்கள் ஆகஸ்ட் 6ம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும். Children's Badminton Court, றக்கா றோட், யாழ்ப்பாணம். 1148

## வாடகைக்கு

யாழ். நகரில் எந்தவியாபாரமும் செய்யக்கூடிய வகையில் கடைகள் வாடகைக்குண்டு. எழுத்துமூலம் தொடர்புகொள்ளவும். விளம்பர இல: 1196, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 1196

## FOR SALE

Two "Raleigh Theris Super MX 100" Boys Cycle (Seven Months) Used Callers only. 115, Temple Road, Jaffna. (near Racca Road / Temple Road Junction. 1212

## கோழித்திருட்டு இருவர் கைது

[கிளிநொச்சி]

கிளிநொச்சிப் பகுதியில் உள்ள ஜெயந்திநகர் திருநகர் கனகபுரம் ஆகியபகுதிகளில் அடிக்கடி இடம்பெற்று வந்த கோழித்திருட்டுச் சம்பவங்களை தொடர்ந்து கிளிநொச்சி பொலிசார் திருட்டுப்போன 25கோழிகளை மீட்டதுடன் இரண்டு வாலிபர்களையும் கைது செய்துள்ளனர்.

பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி வி.எ.சுகததாச தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் ஜெயந்தி நகரில் உள்ள வீடொன்றை சோதனை செய்தபோதே இக் கோழிகள் மீட்கப்பட்டன. அத்துடன் கோழித் திருட்டை மேற்கொண்ட வாலிபர்களையும் இவ் வீட்டில் இருந்து கைது செய்தனர்.

பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரது வீட்டிலிருந்து திருட்டுப்போன கோழிகளும் மீட்கப்பட்ட கோழிகளில் அடங்கிஇருந்தது குறிப்பிடத்தக்கது.

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் 2-ம் குறுக்குத்தெருவிலுள்ள மாடிவீடு வாடகைக்கு உடன் கொடுக்கப்படும்.

விபரம்:

க. சற்குணநாதன்,
சட்டத்தரணி,
121, 2ம்குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
1204

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற, புத்தூர் மேற்கு, இராசரத்தினம் துரைசிங்கம் என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தின் விடயத்தில்
— மரணமெய்தியவர்

இராசரத்தினம் துரைசிங்கம் கைம்பெண் சரஸ்வதி, புத்தூர் மேற்கு, புத்தூர்.
—மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் } இல. 3819

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 7ஆந் நாளன்று முற்பகல் 9.30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றுர்.

நீதிமன்றக் கட்டளைப்படி

கு. குலசிங்கம்,
பதிவாளர்.

1984-ம் ஆண்டு ஆடி மாதம் 23ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

என்னுல் வரையப்பட்டது.
இ. இராமலிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி.
1150

## நன்றி நவிலலும் செப ஆராதனையும்

ரஞ்சன் கந்தையா
(உப பொலிஸ் பரிசோதகர், சிலாபம்)

தோற்றம்: 27-3-48 மறைவு: 4-7-84



எம்மனைவரையும் ஆறுத் துயரில் ஆழ்த்திவிட்டு மின்னலென மறைந்து விட்ட மாணிக்கமே! உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம். அன்னுரது ஈமக் கிரியையில் கலந்தும், துக்க அனுதாபம் தெரிவித்தும் சகல உதவிகள் புரிந்தஉறவினர், சிநேகிதர் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி. மற்றும் 11-8-84-ம் திகதி பி. ப. 3-00 மணிக்கு அவரின் ஆத்ம சாந்திக்காக நடைபெறவிருக்கும் பிரார்த்தனைக் கூட்டத்தில் பங்குபற்றுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இப்படிக்கு.
மனைவி, மகள், பெற்றோர், சகோதரர்.
'அன்பு இல்லம்',
அராலி தெற்கு, வட்டுக்கோட்டை. 1180

## மூன்றுவது ஆண்டு நினைவு நாள்

திருமதி கனகம்மா சிங்கரத்தினம்
(கெருடாவில்)



மலர்வு: 05–07–1905

உதிர்வு: 09–08–1981

ஐயிரண்டு மாதம் அருமையுடன்
தாங்கிப் பெற்றெடுத்து
மையலுடன் மனமகிழ மண்ணிலேயெமை வளர்த்து
வையமெங்கும் புகழ் கல்வி வளமுடனே
எமக்களித்து
ஐயமறு நல்வாழ்வு தந்தனையேயம்
மாவுனைக் காண்பதெப் போ.

மக்கள், மருமகன், பேரப்பிள்ளைகள்.
கெருடாவில்; தொண்டமானுறு. (1155)

## நினைவஞ்சலி



திருமதி
பிறைட்டன்
(காமினி)
அன்னைமடியில்
9–7–56
இறைவனடியில்
4–8–83
பூவோடும் பொட்டோடும்
உதிர்வு

இல்லறத்தில் இணையாக
இணைத்தாயே என் கரத்தை
இடையில் ஏன் பறித்தாயோ
இறைவா என் மலர் சரத்தை
பூவோடும் பொட்டோடும் புண்ணியவதி
நீ மறைந்து பூத்ததம்மா ஆண்டொன்று
நாவோடு சுவையாக நகத்தோடு சதையாக
பாலோடு நீராக நாம் பகிர்ந்திட்ட நினைவுகளை
பசுமையாகத் தினம் பால்வார்த்தே வளர்த்திடுவேன்

இரு விழியாய் நாம் இருந்தோம்
இமையெனவே தினம் நீயிருந்தாய்
இணைத்தே நாம் பெற்ற இரு விழியை
இதயம் என்னில் இயங்கும்வரை
உதயம் காட்டி வளர்த்திடுவேன் — என்
உயிரெனவே தினம் காத்திடுவேன்
நிலவின்றி வானுக நீரின்றி மீனுக
பகலின்றி தினம் இரவாக — காமினி
நீ யில்லாத விளக்காக சூரியனில்லாத கிழக்காக
என்னில் சொட்டுகின்ற வேதனையை
கண்ணில் கொட்டுகின்ற நீரதனை
காலமெல்லாம் அஞ்சலியாம்
கண்ணகியே தந்திடுவேன்.

உமது பிரிவால் துயருறும்
அன்புக் கணவன், பிள்ளைகள் (ஜேர்மனி),
பப்பா, மம்மி, சகோதரர், சகோதரிகள்,
மாமா, மாமி, மச்சான்மார், மச்சாள்.
63, 4-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (1060)

# சென்னை விமான நிலையத்தில் குண்டு வெடிப்பு! 12 பேர் பலி!!

## 16 பேர் படுகாயம்

சென்னை, ஆக. 3

**சென்னை 'மீனம்பாக்கம்' விமான நிலையத்தில் நேற்று இடம் பெற்ற பயங்கரக் குண்டு வெடிப்பொன்றில் 12 பேர் கொல்லப்பட்டனர். 16பேர் காயமடைந்தனர். இவ்விமான நிலையத்தின் வெளிநாட்டுப் பயணிகள் தங்கும் அறையிலேயே இப்பயங்கரச் சம்பவம் நிகழ்ந்தது.**

கேட்பாரற்ற நிலையில் பார்சல் ஒன்று வெளிநாட்டுப் பயணிகள் தங்கும் அறையில் ஒரு பக்கத்தே கிடக்கக் காணப்பட்டதாம். இப்பார்சலில் இருந்தே அக்குண்டு வெடித்திருக்கலாமென்று தற்போது கருதப்படுகின்றது.

நேற்றிரவு சுமார் 11 மணியளவிலேயே இக்குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. ஆனல் இரவு 8-30 மணியளவில் ஒரு அநாமதேயத் தொலைபேசி அழைப்பு இவ்விமான நிலைய அதிகாரிகளிடம், இங்கு குண்டொன்று வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்ததென்று கூறப்பட்டது.

குண்டுவெடிப்பில் இறந்தவர்களின் விபரமெதுவும் தெரிவிக்கப்படவில்லை. பொலிசார் இவ்விமான நிலையக் கட்டிடத்தைச் சூழ்ந்துள்ளனர். புலன் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இறுதியாகக் கிடைத்த சில தகவல்களின்படி படுகாயமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் சிலர் இறந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. ஆனல் இச்செய்தி தெளிவாக ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

இந்திய விமான நிலையமொன்றில் முதற் தடவையாக நிகழ்ந்த பயங்கரக் குண்டு வெடிப்புச்சம்பவம் இதுவெனக் கருதப்படுகின்றது. [கி]

## வெங்கட்ராமனுக்கு பிரியாவிடை

புதுடில்லி, ஆக. 3

இந்திய உப ஜனதிபதித் தேர்தலுக்கான இந்திரா காங்கிரஸ் கட்சி வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள திரு. ஆர். வெங்கட்ராமனுக்கு இந்திய பாதுகாப்பு அமைச்சு நேற்று பிரியாவிடை அளித்துக் கௌரவித்தது.

திரு. வெங்கட்ராமன் வேட்பாளர் நியமனம் பெற்றதையடுத்து பாதுகாப்பமைச்சர் பதவியிலிருந்தும் நேற்று முன்தினம் விலகிக்கொண்டார்.

முப்படைத் தளபதிகள், மற்றும் பாதுகாப்பமைச்சு உயரதிகாரிகள் திரு. வெங்கட்ராமனைப் பாராட்டிப் பிரியாவிடை அளித்தனர். நடராஜப் பெருமான் சிலையொன்றையும் அவர்கள் அன்பளிப்பாக அவருக்கு வழங்கினர். [கி]

## கிளிநொச்சியில் 3000 ஏக்கரில் சட்டவிரோத நெற்செய்கை!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறை மேற்கொள்ளப்பட்ட சிறுபோக வேளாண்மையின் போது சட்டவிரோதமான முறையில் சுமார் மூவாயிரம் ஏக்கர் நிலத்தில் நெற்செய்கை பண்ணப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் உள்ள குளங்கள் மூலம் 6200 ஹெக்டயர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி அளிப்பதென்று நீர்ப்பாசனத்திணைக்களம் முடிவு செய்து இதற்கு அமைவாகவே சிறுபோக வேளாண்மைக்கு நீர்வழங்கப்பட்டுவந்தது.

இந்த முடிவை மீறி இப்பகுதி விவசாயிகள் 1200 ஹெக்டயர் (300 ஏக்கர்) நிலத்திற்கு சட்டவிரோதமான முறையில் நீர் எடுத்து சிறுபோக வேளாண்மையை மேற்கொண்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் குளத்து நீரை எடுத்து மேலதிகவேளாண்மை செய்தோருக்கு எதிராக தற்போது குற்றப்பணம் அறவிட விவசாயப்பகுதியும், நீர்ப்பாசனப் பகுதியும் நடவடிக்கை எடுத்துள்ளது.

இரணைமடுக்குளத்தின் மூலம் நீர்பெற்றுவேளாண்மை செய்வோரே கூடுதலான நிலத்தில் சட்டவிரோத வேளாண்மையை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரசாங்கத்தை முழுக்க முழுக்க நம்பியிருக்கக்கூடாது

(சித்தன்கேணி)

''கிராமத்தின் அபிவிருத்திக்கு கிராமமுன்னேற்றச்சங்கங்களோ, மாதர் கிராமமுன்னேற்றச் சங்கங்களோ முழுக்க முழுக்க அரசாங்கத்தின் உதவிகளை நம்பியிருக்காமல் சிறுசிறு அபிவிருத்தித் திட்டங்களை அப்பகுதியிலுள்ள மூலப் பொருட்களைக் கொண்டே ஆரம்பித்து தமது கிராமங்களை முன்னேற்றமடையச் செய்யவேண்டும்''.

இவ்வாறு கரவெட்டிவடக்கு விசேட சேவை அலுவலர் திரு. தி. வரதராசன் வதிரி கதிர்காம கோவிலடி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கப் புனரமைப்புக் கூட்டத்தில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

திருமதி. கனகசபை தங்கராணி தலைமைவகித்தார்.

## எல். ஐ. ஸி. கட்டிடத்தில் தீ! இருவர் பலியானர்கள்!

சென்னை, ஆக. 3

சென்னையில் மிக உயர்ந்த கட்டிடமான எல். ஐ. ஸி. கட்டிடத்தின் கீழ்த் தளத்தில் ஏற்பட்ட தீயினல் இருவர் பலியானர்கள்.

இச்சம்பவம் நேற்று மாலை சென்னையில் இடம்பெற்றது. இக்கட்டிடத்தின கீழ்ப்பகுதியில் தீப்பிடித்தது. ஆனல் அரைமணி நேரத்தில் தீயணைக்கும் படையினர் இத்தீயைக் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு வந்தனர்.

எல். ஐ.ஸி.க் கட்டிடத்தில் பணிபுரியும் இரு சிற்றூழியர்களுக்கிடையே ஏற்பட்ட வாக்குவாதமே இத்தீ பரவியமைக்குக் காரணமென்று தெரிவிக்கப்பட்டது.

சம்பள விடயம் தொடர்பாக இரு சிற்றூழியர்கள் வாக்குவாதப் பட்டனராம். பின்னர் அவர்களில் ஒருவர் மற்றவர் மீது மண்ணெண்ணையைத் தெளித்துத் தீ மூட்டினர் என்று தெரிவிக்கப்பட்டது. இவர்கள் மிகுந்த மது போதையில் இருந்தனர் எனவும் கூறப்பட்டது.

எல். ஐ. ஸி.க் கட்டிடத்தில் ஐந்து வருடங்களுக்கு முன்னரும் பெரியளவில் தீப் பிடித்திருந்தது. இக்கட்டிடம் 14 மாடிகளைக்கொண்ட சென்னையில் மிக உயரமான கட்டிடமாகும். [கி]

## கடன் வசதி

[புலோலி]

கடந்த வருடம் ஜூலை வன்செயல்களினல் பாதிக்கப்பட்ட 47பேருக்கு சிறுகைத்தொழில் முயற்சி ஊக்குவிப்புக்கடனை வதிரி அபிவிருத்தி நிறுவனம் தலா 200 ரூபா வீதம் 9,400 ரூபாவை வழங்கியுள்ளது இச்சிறுகைத் தொழில் முயற்சி ஊக்குவிப்புக்கடனைப் பெற்ற 47பேரும் வதிரியைச் சேர்ந்தவர்களாவர்.

## குருபூசை

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் சனிக்கிழமை பிற்பகல் 3 மணி அளவில் திருநெல்வேலி கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வாலை அம்மன்ஆலயத்தில் சுந்தரமூர்த்திநாயனர் குருபூசை கொண்டாடுகின்றனர். இக்குருபூசையில் திருமுறை இசை அரங்கு விரிவுரை ஆகியன இடம்பெறும். [ப]


UNIQUE COMMUNICATION SERVICE

யுனிக் கொமுயுனிக்கேசன் சேர்விஸ்



நொடிப்பொழுதில் தெளிவான சர்வதேச தொலைபேசி ரெலெக்ஸ் அழைப்புகளுக்கு இன்றே நாடுங்கள் - யுனிக்

24 மணிநேர சேவை

யாழ் நகர அலுவலகம்
28/18 - 1·1 மகாத்மா காந்தி ரோட்,
(சலுசலவுக்கு அண்மையில்)
யாழ்ப்பாணம்.
ரெலெக்ஸ்:- 22285 PERIMR CE
தொலைபேசி 22789 22891

கொழும்பு நகர அலுவலகம்
அவுஸதிரேலியா கட்டிடம
த.பெ. 1917, 54 யோர்க் வீதி, கொழும்பு :
ரெலெக்ஸ.- 21652, 21742 21918 21931, PERIMR CE
தொலைபேசி:-22726 547884, 548626, 549065, 549066



யாழ். மக்களுக்கோர் நற்செய்தி

★ மங்களகரமான திறப்பு விழா ★

குயிக்ஸ் என்ரபிறைசஸ்

(Quicks Enterprises—Travels, Tours, Auctioneers and Brokers)



இல. 533, ஸ்ரான்லி வீதியில் (யாழ். புகையிரத நிலையத்திற்கு பின்புறமாக) மேற்படி ஸ்தாபனம்

எதிர்வரும் ஞாயிறு 5-8-84

பி. ப. 4-00 மணிக்கு

திரு. S. K. திரவியநாயகம்,

J. P. U. M. சட்டத்தரணி அவர்களால்

மங்கள விளக்கேற்றி திறந்துவைக்கப்படும்

எமது ஸ்தாபனம் பொறுப்பேற்கும் விடயங்கள்

1. மிகக்குறுகிய காலத்திற்குள் விமானப் பயண ஒழுங்குகள், கடவுச் சீட்டுகள், இந்தியா செல்வதற்கான விசா முதலியன இங்கிருந்தே பெற்றுக்கொடுத்தல்.
2. காணி விற்பனை, வாகனதிகள் விற்பனை ஒழுங்கு செய்தல்.
3. வீடுகட்ட படங்கள் வரைதல், மதிப்பீடுகள் சமர்ப்பித்தல், கட்டிடங்கள் அமைத்தல்.
4. காணி அளப்பனவுகள், மட்டுப்படுத்தல், படம் வரைதல், மதிப்பீடுசெய்தல்.
5. சகலவித காப்புறுதி ஒழுங்குகளும் செய்து கொடுத்தல்.
6. யாழ் - கொழும்பு ''தாசா ரூவர்ஸ்'' லக்சறி பஸ்சேவை ஆசனங்கள் பதிவு செய்தல்.

குயிக்ஸ் என்ரபிறைசஸ்

533, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

### மணிவாக்கு

கள்ள மரத்தின் கனிகளில் இருந்தே உள்ளம் எதுவென உணர்ந்து கொள்வீரே! ஆயிரம் தரம் எனை ஆண்டவர் என்றால் மோட்சலோகம் முந்துவதில்லை.

— இயேசு காவியம்.

## இன்று சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை:

# தோழமையும் தூயபக்தியும் உடையவர் சுந்தரர்

இறைவனைத் தோழமையால் பெரிதும் உரிமையோடு நெருங்கிக் கூறும் பாடல்களைச் சுந்தரமூர்த்திகளது திருப்பதிகங்களிலேதான் காண இயலும். முதலை உண்டபாலனை அழைக்கப்பாடு மிடத்தில் ''புரைக்காடு சோலை புக்கொளியூர் அவிநாசியே-கரைக்காண் முதலையைப் பிள்ளையைதரச் சொல்லுகாலனையே'' என்றுவேண்டும் திருமொழியில் நாயனாருக்கு இறைவன்பாலுள்ள உரிமை எத்துணைவெளிப்படையாக விளங்குகின்றது.

ஆளுடைய பிள்ளையார், ஆளுடைய அரசுகள் ஆகிய அவர்களும் இறைவனை நேரே கண்டு தம்அநுபவப் பொருளாகப் பெற்றவர்தாம் என்றாலும், அவனை அன்றாடவாழ்க்கையில் உடனுறைவோனாகப் பெரிதும் புலப்படக்கண்டு அளவளாவி. ஊடியும் உகந்தும் உரையாடி, இருமைப் பயனும் இனிதுபெற்று நுகர்ந்தவர் ஆளுடைய நம்பிகளே என்றால் சிறிதும் மிகையாகாது.

சங்கிலியாரது திருமணத்தில் இறைவனை நாயனார் கோயிலைவிட்டு மகிழமரத்தடியில் போய் இருக்கச்சொல்லியதும்...... நாயனார்பின்பு அச்சூளுரையைக் கடந்தபோது அவரைக்கண் இழப்பித்து, அடிக்கடி எளிமையில் எதிர்படுகின்ற அவன் அவர் பண்முறைவேண்டியும் பலநாள் எதிர்படா தொழிந்ததும்..... ..பின்னர் காஞ்சிபுரத்திலும், திருவாரூரிலும் சுவாமிகள் எத்துணையோ வகையாகக் குறையிருந்து நிற்கமுறையே இடக்கண்ணையும் வலக்கண்ணையும் கொடுத்தருளி முன்போ- தோழமைஉரிமைதந்து நின்று பரவையாரிடம் ஒரு முறையன்றி இருமுறை நாயனாருக்காகத்திருவாரூர்த் தெருவில் தூது நடந்ததும்போல அணுக்கமாகிய உரிமைப் பேறுகளைச் சுந்தரர் தவிர வேறுயாவர்தாம் பெற்றார்-

திருக்கோளிலி இறைவன் குண்டையூரில் நெல்கொடுக்க, அதனை எடுத்துவந்து சேர்க்க ஆள்தருக என்றுபாடி அங்ஙனமேதரப் பெற்றார்- இவை எல்லாம் அவரதுதோழமை உரிமையை எவ்வளவு தெளிவாக நமக்குப் புலப்படுத்துகின்றன.

இவை எல்லாம் நோக்கின்

(8-ம் பக்கம் பார்க்க

### சி. அரணைவடிவேல் முதலியார்

# நமது நோக்கு

## பிராந்தியம் அனைத்துக்கும் அபாயம்!

இலங்கையைப் பாதுகாப்பதானால் வட பகுதிக் கடல் கண்காணிப்பு வலயத்துடன், விரைவில் விஸ்தரிக்கப்படவிருக்கும் கிழக்குப் பிராந்தியப் பாதுகாப்புப் போதுமென்று அமைச்சர் லலித் நினைக்கிறார் போலும்.

இலங்கையின் பாதுகாப்புப் பிரச்னை வட பகுதிப் பயங்கரவாதத்தால் அமுக்குண்டிருப்பது அமைச்சரின் இந்தக் கூற்றால் வெளிப்படுகிறது.

பந்தோபஸ்து அமைச்சர் அத்துலத் முதலியின் அனுபவத்திலும் - ஏன் ஆற்றலிலும் - மிக்க இந்தியப் பிரதமர் இந்தியாவைப் பற்றிக் குறிப்பிடும்போது இந்து சமுத்திர ராணுவ நாடகம், இப்பிராந்திய நாடுகள் அனைத்துக்கும் அச்சுறுத்தலாக இருக்கின்றதென்று திட்ட வட்டமாகக் கூறியிருக்கிறார்.

இந்திய ராணுவத்தின் தெற்கு ஆகாயப் பாதுகாப்பு நிலையத்தை திருவனந்தபுரத்தில் அண்மையில் திறந்து வைத்தபோது இவ்வாறு குறிப்பிட்டு எச்சரிக்கை விடுத்திருக்கிறார் இந்திரா.

நாட்டின் ஒருமைப்பாட்டைக் குழப்பிவிடும் சக்திகளுக்குத் தக்க தலையடி கொடுத்த இந்தியப் பிரதமர் வெளிநாடுகளின் ஊடுருவல் இந்து சமுத்திர ராணுவ முயற்சிகளில் தென்படுவதாகக் கருதுகிறார்.

இலங்கை ஒரு சிறு நாடு. இன்றைய ஒரே ஒரு ஆபத்து வட பகுதிப் பயங்கரவாதிகளும் அவர் சார்பில் குரல் எழுப்பும் தமிழகமும் என்ற அடிப்படையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

நாடு சிறிதானாலும் ஸ்தானம் பெரிது; வல்லரசுகளுக்கு வாய்ப்பளிக்க இலங்கை பெரிதும் உதவலாம். எனவே நடுநிலைமை வகிக்கும் நமது நாடு இந்து சமுத்திரப் பிராந்திய நிலைமைபற்றிப் பரவாய் பண்ணாது நடப்பதன் மர்மம் என்ன?

இந்திய உபகண்டத்தைப் பற்றி இங்கு நிலவும் சந்தேகம் பெரிய வல்லரசுகள் பற்றியில்லை; ஆனால் இந்தியப் பிரதமர் இந்தியாவின் நிரந்தரமான வெளிநாட்டுக் கொள்கையைத் தெளிவாக மீண்டும் நினைவூட்டியுள்ளார் - எந்த நாட்டையும் ஆக்கிரமிப்பதில்லை என்பதே அது.

திருவனந்தபுரத்திலிருந்து இந்திய விமானப்படை இலங்கைவந்து சேர 20 நிமிடங்கள் போதும். பாராளுமன்றத்தில் இந்திய துவேஷம் தலையெடுத்தபோது எதிர்க்கட்சித் தலைவர் அநுரா, ஒரு சிகரெட் பற்ற வைத்துப் புகைத்து முடிய முன் இந்திய விமானப் படை இலங்கை வந்து சேர முடியுமென எச்சரித்தார்.

கடந்த ஆடியைப் போலல்லாமல் இன்று இந்தியாவைத் திட்டுதல் ஓய்ந்துவிட்டது. அதென்னவானாலும் வெளிநாட்டு விவகாரங்களை நோக்கும்போது இந்துசமுத்திர நடவடிக்கைகளில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் பொதுக் கொள்கை அவசியம்.

தமிழ்ப் பயங்கரவாதம் காரணமாக ஒரு புது அமைச்சு - தேசிய பந்தோபஸ்து சமைத்த அரசு இந்தியாவில் நடைபெற்ற அமைச்சரவை மாற்றத்தை ஒரு நல்ல பாடமாகக்கொள்ளலாம்.

பஞ்சாப் இந்திய அரசுக்கு ஏற்படுத்திய கலக்கத்தால், திறமைமிக்க திரு. பி. வி. நரசிம்மராவ் உள்நாட்டு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். பாதுகாப்பு அமைச்சராக இருந்த திரு. ஆர். வெங்கட்ராமன் உபஜனாதிபதித் தேர்தலில் இறங்கியிருப்பதால் திரு. வை. பி. சவான் அந்த இடத்தை எடுத்திருக்கிறார்.

நாட்டுக்குள் நிலவியபேராபத்தையும், நாட்டை எதிர்நோக்கும் வெளிநாட்டு விவகாரங்களின் சிக்கலையும் சமாளிக்க இந்தியப் பிரதரின் சமயோசித நடவடிக்கை இலங்கைக்கு உதவ வேண்டும்.

இந்தியா பலவீனப்படுதலை விரும்பும் குறுகிய நோக்கினர் எங்கள் நாடு வல்லரசுகளுக்கு அடிமைப்படுவதை விரும்பியராவர்.

## பொன்னாலை வரதராஜப் பெருமாள் கொடி

காத்தற் கடவுளாகிய கிருஷ்ண பகவானுக்கு இந்நாட்டில் உள்ள தொன்மை மிகு கோவில்களில் ஒன்று பொன்னாலையத்தில் அழலாக அமைந்திருக்கும் வரதராசப் பெருமாள் ஆலயமாகும். குளங்களும் மேற்குத்திக்கில் வயல்களும் முன்னே இருக்கவும் உவர் நீர்க்கடலும் சமுத்திரமும் தெற்கு மேற்குத் திசைகளிற் பொருந்தவும் சதுரங்கமென்னும் மணற்பூமியில் இத்திவ்விய ஸ்தலம் இருக்கிறது. இத்தலத்திற்கு சுவர்ணாலயபுரி சதுரங்கம் என வேறு நாமங்களுமுள. கிழக்கு நோக்கிய சந்நிதியுடன் மிக அழகாக விளங்கும் இவ்வாலயத்திற்கு தற்போது இரு பிரகாரங்களே காணப்படுகின்றன. எனினும் ஒல்லாந்தர் ஆட்சிக்குமுன் ஏழு பிரகாரங்கள் இருந்தனவென்றும் அவைகள் அவர்களால் சிதைவுபடுத்தப்பட்டதாகவும் வரலாறு பகர்கின்றது. அவற்றுள் ஏழாவது பிரகாரத்தின் முன்னுள்ள விநாயகர் ஆலயம் இன்று உளது.

முன்னொரு காலத்தில் துருவாசமுனிவர் இட்ட சாபத்தினால் நீசத்தன்மையடைந்த இந்திரன் சபா வீமோசனத்திற்காக அம்முனிவரைச் சரணடைந்தான். இந்திரன் மீது மனமிறங்கிய முனிவர் அவனிடம் ''இந்திரனே ஈழநாட்டின் பொன்னாலையம் பட்டணத்தில் நீவலைஞர் குலத்தில் பிறப்பாய். வாசுதேவர் கூர்மாவதாரம் செய்ய அதனை உம் வலையினாலே கட்டியபின் உவது அங்கம் தீண்டப்பட்டவுடன் சாபத்தினின்றும் நீங்கப்பெறுவாய் எனக் கூறினார்.

இவ்வண்ணமே வலைஞர் குலத்திற் பிறந்த இந்திரன் ஒருநாள் கடலில் வலைவீசியபொழுது அல்வலையில் ஒரு ஆமை அகப்பட்டது. அவ்வாமையைத் தனியே இழுக்க முடியாமல் அயலில் இருந்தோரை உதவிக்கு அழைத்துக் கரைசேர்த்தபோது மாபெரும் அற்புதம் ஒன்று நிகழ்ந்தது. கரையிலிருந்த அக்கூர்மம் கல்லாய் மாறியதுடன் வானத்தில் பொன்னொளி வீசும்விமானமொன்று தென்பட்டது. வலைஞனாக இருந்த இந்திரன் தனது சுயரூபம் பெற்றான் இந்திரனுக்குக் காட்சி கொடுத்த திருமாலின் திருவடி பதிந்தஇடமே இன்றும் திருவடிநிலை என வழங்கப் பெறுகின்றது. இங்குதான் வருடாந்தத் தீர்த்தோற்சவத்தன்று பெருமாள் எழுந்தருளி தீர்த்தம் வழங்குகின்றார்.

இவ்வரிய காட்சியைக் கண்ணுற்றவர்கள் ஆனந்தமுற்று அவ்விடத்திலேயே விஷ்ணு ஆலயம் அமைத்தனர். கிருஷ்ண ஜெயந்தியாகிய இம்மாதம் 20 ம் திகதி தேர்த் திருவிழா வரக்கூடியதாக அவ்வாலயத்தில் இன்று கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகிறது.

### எஸ். எஸ். ஜெயரெட்ணம்



நல்லூர்க்கந்தன்

இன்று

3-ம் திருவிழா

நல்லூரான்

திருவடியை...!

நல்லூரான் திருவடியை நண்ண வேண்டும்
நாளெல்லா மவன்பூசை பண்ண வேண்டும்
எல்லாவரும் வாழ்கவென்றே ஏற்ற வேண்டும்
ஏகாந்த மாயிருந்து போற்ற வேண்டும்
இல்லோரும் ஏழைகளும் வாழ வேண்டும்
ஏழ்மையொடு ஈனமெல்லாம் மாள வேண்டும்
கொல்லாத விரதமதைக் கொள்ள வேண்டும்
கொடுமையொடு குரூரமதைத் தள்ள வேண்டும்
நில்லாத வாழ்க்கையினை நினைக்க வேண்டும்
நீலமயில் வாகனனை அணைக்க வேண்டும்
கல்லாத மாந்தர்நெறி கடக்க வேண்டும்
கற்றபடி நாமெல்லாம் நடக்க வேண்டும்
பொல்லாத பொறாமைதனைப் போக்க வேண்டும்
பொய்யோடு போட்டிகளை நீக்க வேண்டும்
சொல்லாரும் குறவள்ளி ஏற்று கந்தன்
சோபான வழிநின்றே வாழ்வோம் நன்றே

— முருக. வே. பரமநாதன்

○ ○ ○

## ''காரைக் கதிர் வேலா காட்சிதர வருவாய்''

காரைக் கதிர்வேலா கறைக்கண்டன் மைந்தா
கானகம் மீதிருந்து கருணை ஒளி தருவாய்
கலைத் தோகை விரித்தாடும் புள்ளி மயில்மீது
கருணை வேல் தாங்கி காட்சி தர வருவாய்

பாரினிலே உன்னை பண்முறையால் பாடிநிற்க
பாவையிரு வருடன் பறந்தோடி வருவாய்
பக்தியிலே உன்னை பரவசமாய் நாடி நிற்க
பாலமுருகனாக காரையிலே இருந்து காட்சி தர
வருவாய்

— காரை. பா. அருளானந்தன்

[இப்பொழுது காரைநகர் அரசடிக்காடு கதிர்வேலாயுதசுவாமி மகோற்சவ உற்சவங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன]

## உடனடி உதவி

யாழ். மத்திய கல்லூரியின், 14 வயதுடைய எட்டாம் வகுப்பு மாணவன் டினேஷின் உயிர் ஊசலாடுகிறது

இவரைத் தப்ப வைக்க மாற்று சிறுநீரகம் தேவை; இந்தியாவின் பிரபலவேலூர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இது ஓரிரு தினங்களில் பொருத்தப்படவேண்டும்.

உயிரைக் காப்பது மனிதனின் அடிப்படை உரிமைகளில் முதலானது.. கருத்தரங்குகள் வைக்கின்றோம்; காரியம் ஆற்ற சவால் முன் வந்திருக்கிறது.

ரோட்டரி, லயன்ஸ் போன்ற வள்ளன்மைக்கு உதாரணமான நிறுவனங்கள் உதவுவதற்கு தயங்கமாட்டா.

அவற்றில் பொறுப்பைச் சுமத்திவிட்டு நாம் சும்மா விருப்பதா? அல்லற்படுவோருக்கு என்றும் அன்புகாட்ட ஆயத்தமாக இருக்க வேண்டும். இந்தத் தத்துவமே இன்று மனித உரிமையாகப் பரிணமிக்கிறது.

வாழும் வளரும் உயிரைக் காக்க, குடும்பத்தின் துயரைத் துடைக்க, சமூகத்தின் மனச்சான்றை நிரூபிக்க வசதியுள்ள ஒவ்வொருவரும் விரைவோமாக.

# புதுமைகளால் பொலியப் பெற்ற சின்னமடு செபமாலை மாதா

நாரந்தனை
**அ. சிங்கராயர்**

அன்னை மரியாள் அருள் மழை பொழியும் ஆலயங்கள் பல ஊடன் தீவெங்கும் பரந்து மிளிர்கின்றன. அண்டினோரின் அல்லல் அகற்றி ஆறுதல் அளிப்பவர் அவள் என்பதை அடியார்களின் ஆலய தரிசனத்திலிருந்து அறிந்து கொள்ளலாம். சனிவாரம் வியாழவாரம் அன்னையின் ஆலயங்களில் அடியார்களின் கும்பலைக் காணலாம், இத்தகைய ஆலயங்களில் ஒன்று தான் சின்னமடு பரிசுத்த செபமாலை மாதா ஆலயம்.

வரம்வேண்டினோர்க்குஇல்லையென்னுது கரம் கொடுக்கும் அன்னையின் ஆலயம் சரவணை எனப்படும் பதியில் அமைந்துள்ளது மன்னார் மாவட்ட மருதமடு மாதாவின் ஆலயத்தைப் பிரதிபலிப்பதுபோல் யாத்திரிகர் குழாம், கும்பல் கும்பலாக இவ்வாலயத்தை அண்டிவருவதைக் கண்ட மக்கள் இப்பதியைச் 'சின்னமடு' என்று செல்லமாக அழைக்கலானார்கள்,

சின்னமடு செபமாலை மாதாவின் ஆலய வரலாறு 1894-ல் வணக்கத்துக்குரிய விஸ்திரீனி சுவாமியவர்களின் காலத்தில் ஆரம்பமானது. தீவுப்பகுதியில் வேதம் போதிக்க வந்த வணக்கத்துக்குரிய விஸ்திரீனி சுவாமியார் சரவணைப் பதியிலும் தம் பணியை மேற்கொண்டார். சொற்ப தொகையினர் ஞான முழுக்குப் பெற்றுக் கிறீஸ்தவர்களாக மாறினர். அப்புதுக் கிறீஸ்தவர்களின் ஞான வாழ்வுக்குப் புத்துயிரூட்ட ஊர்காவற்றுறைப் பங்கின் கட்டளைக்குரவராயிருந்த வணக்கத்துக்குரிய சந்திரசேகரர் சுவாமியார் தொடர்ந்து பணியாற்றினர். பனைமரத் தூண்களாலும் கிடுகுகளினுலுமான ஒரு கொட்டிலாக அமைக்கப்பட்டது. ஆலயத்தில் வைத்து வணங்கப்படும் அன்னை மரியின் அற்புத சுரூபம் ஊர்காவற்றுறை சந்தியோகுமையோர் ஆலயத்திலிருந்து பெறப்பட்டது.

பரிசுத்த செபமாலை மாதாவின் பெயரால் அமைக்கப்பட்ட இத்திருப்பதி புதுமைகளால் பொலியப் பெற்றதினுல் நாற் திசைகளிலிருந்தும் மக்கள் யாத்திரையாக வரத் தொடங்கினர்கள். 1907-ம் ஆண்டு வணக்கத்துக்குரிய டோருச் சுவாமியாரால் புதிய ஆலயமும் குருமனையும் அமைக்கப்படலாயிற்று,

இத்திருப்பதியிலே தேவனின் கிருபாகடாட்சம் பிரதிபலிப்பதைக்கண்ட அதி வந்தனைக்குரிய யூலன்மேற்றிராணி ஆண்டவர் 1909ம் ஆண்டு இதனை ஓர் யாத்திரைத் தலமாக அங்கீகாரம் செய்தார்.

சின்னமடு பதியில் செபமாலை அன்னையின் அருள் பாலிக்கும் பிரசன்னம் தீவுப் பகுதியில் வாழும் குடிமக்களுக்கு மட்டுமல்ல, எல்லா கிறிஸ்தவ, இந்து சகோதரர்

(8ம் பக்கம் பார்க்க)

## ★ ஒலிம்பிக்

### பதக்கப் பட்டியல்

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 20 | 9 | 2 |
| சீன | 7 | 3 | 4 |
| இத்தாலி | 4 | 1 | 1 |
| கனடா | 4 | 3 | 1 |
| மே. ஜேர்மனி | 4 | 3 | 4 |
| பிரிட்டன் | 1 | 1 | 4 |
| ஆஸ்திரேலியா | 0 | 2 | 4 |
| பிரான்ஸ் | 0 | 2 | 2 |
| பிரேஸில் | 0 | 1 | 0 |
| பேரு | 0 | 1 | 0 |
| சுவீடன் | 0 | 3 | 2 |
| ஜப்பான் | 0 | 0 | 4 |
| நெதர்லாந்து | 0 | 1 | 3 |
| பெல்ஜியம் | 0 | 0 | 1 |
| நோர்வே | 0 | 0 | 1 |
| ருமேனியா | 1 | 3 | 0 |
| சுவிற்ச்சலாந்து | 1 | 1 | 1 |
| தென் கொரியா | 1 | 0 | 0 |
| கொலம்பியா | 0 | 1 | 0 |
| பின்லாந்து | 0 | 0 | 1 |
| தாய்வான் | 0 | 0 | 1 |

### வெறுங்காலுடன் ஓட்டம்



ஒலிம்பிக் ஓட்டப் பந்தயங்களில் வீராங்கனை ஒருவர் வெறுங்காலுடன் பங்குகொள்கிறுர். தென்னுபிரிக்காவில் பிறந்து அண்மையில் பிரிட்டனில் பிரஜாவுரிமை பெற்றவரான ஸோலா பட் என்பவரே இந்த வீராங்கனையாவார். 18 வயதேயான இவர் ஒலிம்பிக்கில் 3000 மீட்டர் நீண்டதூர ஓட்டத்தில் போட்டியிடுகிறுர்.

தமக்கு சப்பாத்து (Spike) போட்டு ஓடுவதைவிட வெறுங்காலுடன் ஓடுவதே கூடுதல் உற்சாகம் தருகிறது என்கிறுர் ஸோலா பட். உற்சாகத்துடன் தான் மட்டுமே ஒலிம்பிக்கில் வெறுங்காலுடன் ஓடும் ஒரு போட்டியாளராக இருக்கக் கூடும் என்றும் கூறினர்.

ஸோலா பட், மேரி டெக்கர் என்ற அமெரிக்காவைச் சேர்ந்த உலக வீரங்கனையுடன் போட்டியிடுகிறுர் இருவருக்கும் கடும் போட்டியிருக்குமென்று கூறப்படுகிறது

வயதில் குறைந்த ஸோலா பட்டை உற்சாகமாக வைத்திருக்க மிருகக்காட்சிசாலை, மற்றும் பூங்காக்களுக்கு பிரிட்டிஷ் அணி அதிகாரிகள் கூட்டிச் சென்றனர்.

### வெற்றிப் பீடத்தில் சீன, தைவான்

சீனவும், தைவானும் கடந்த புதன்கிழமை வெற்றிப் பீடத்தில் அருகருகே நின்று முறையே தங்கம், வெண்கலம் ஆகிய பதக்கங்களைப் பெற்றன இது ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

ஏனெனில் தைவான் சீனவிலிருந்து பிரிந்த ஒரு பகுதி. ஆனல் சீன இதற்கு உரிமை கோருகிறது. 1952-ம் ஆண்டு தைவான், சீனக்குடியரசு என்ற பெயரில் ஒலிம்பிக்கில் கலந்து கொண்டதால் சீன ஒலிம்பிக்கை கடந்த 32 வருடங்களாகப் பகிஷ்கரித்தது. பின்னர் 1979-ம் ஆண்டு தைவான் 'சீன தைப்பே' என்று பெயரை மாற்றியதையடுத்தே ஒலிம்பிக்கில் சீன மீண்டும் சேர்ந்து கொண்டது.

எனவே இவ்விரு நாடுகளும் 32 வருடத்தின் பின்னர் பாரம்தூக்கும்போட்டியில் முறையே தங்கம், வெண்கலம்பெற்று வெற்றிப் பீடத்தில் நிஸ்றது ஒரு அபூர்வநிகழ்ச்சியாகவே இருந்தது.

தைவான் வீரர் பதக்கம் பெற்ற பின்னர், அரசியலையும், விளையாட்டையும் பிரிக்க வேண்டுமென்று கூறியதுடன், சீனவீரருடன் போட்டியிட்டது தமக்கு மகிழ்ச்சி தருவதாகக் கூறினர். அப்போது இவருக்கு பலத்த கரகோஷம் கிடைத்தது.

### இந்தியா ஸ்பெயினை வென்றது

இந்தியா ஸ்பெயினுடனை ஹாக்கிப் போட்டியில் 4 3 என்ற ரீதியில் நேற்று வெற்றி பெற்றது. இவ் வெற்றியையடுத்து இந்தியா ஒலிம்பிக் ஹாக்கிப் பந்தயத்தில் ஆறு புள்ளிகளைப் பெற்றுள்ளது.

இந்தியா இதுவரை அமெரிக்காவை 5 1 என்ற ரீதியிலும், மலேஷியாவை 3—1 என்ற ரீதியிலும் வெற்றி பெற்றுள்ளது.

இன்று 4-ம் திகதி அவுஸ்திரேலியாவுடன் இந்தியா மோதுகின்றது. இவ்ஆட்டம் கடும் போட்டியாக இருக்குமென்று கருதப்படுகிறது.

பி-பிரிவு ஆட்டத்தில் பிரிட்டன் கனடாவை 3 1 என்ற ரீதியிலும், பாகிஸ்தான் கென்யாவை 3—1 என்ற ரீதியிலும் மலேஷியா அமெரிக்காவை 4—1 என்ற ரீதியிலும் வென்றன. (கி—சூ)

## செய்திகள் ★

## 6-வது மாத நினைவஞ்சலி

அமரர் கந்தையா தவலிங்கம்
(வேலணை)

மலர்வு:
1948–06–10

உதிர்வு:
1984–03–04



நீ மறைந்து அரை ஆண்டு ஆகியும் உனது நடையும், கள்ளமில்லாப் பேச்சுக்களும், விகடச் சிரிப்பும், செயலும், பாசமும் எங்களது கண்முன்னே நிழலாடுகின்றன.

உன்பிரிவால் துயருறும்
அன்புத் தாய், மனைவி, மக்கள், சகோதரிகள்,
அத்தான்மார், மருமக்கள், மற்றும் உற்றூர்,
உறவினர்

**உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேம்.** 1215


★ அமெரிக்கா ★ கனடா ★ ஜேர்மனி
★ பிரான்ஸ் ★ இத்தாலி
போன்ற சகல நாடுகளுக்கும் செல்ல
டிக்கட் மற்றும் சகல ஒழுங்குகளுக்கும் நாடுங்கள்!

**AIR-TRANSIT**

TRAVEL CONSULTANTS

99–2/56 B கபூர் பில்டிங்,
2-வது மாடி, கொழும்பு-1.
போன்: 549365

538 (290), ஆஸ்பத்திரி வீதி,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம். போன்: 22689



# ஆர்பிக்கோ

இம்மாதச் சலுகைப் பொருள்

10% விலைக் கழிவு

சாப்பாட்டு மேசைகளும்,

கதிரைகளும்

உருக்கினுலான சதுர, நீள் சதுர, வட்ட வடிவங்களில், பல்வேறு டிசைன்களில் சாப்பாட்டு மேசைகள். விலைகள் ரூபா 850/- தொடக்கம் ரூபா 2,200/–வரை.

மேற் பகுதி தோலினுல் அமைந்த சொகுசு சாப்பாட்டு சுழல் கதிரைகளும், சாய்மனைக் கதிரைகளும் – ரூபா 275/- தொடக்கம் ரூபா 1,500/- வரையிலான விலைகளில்.

யாழ்ப்பாணம்: டிருன்ஸ் லங்கா மார்க்கட்டிங் லிமிட்., மொடல் மார்க்கட் கட்டிடம்.

மட்டக்களப்பு: ஈஸ்ரேர்ண் ஹார்ட்வெயர் ஸ்ரோர்ஸ், முனை வீதி.

**றிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி லிமிட்.,**
69, ஹைட்பாக் கோணர், கொழும்பு–2
தொலைபேசி: 25705–6

# விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்கள்

(கொழும்பு)

விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்களாக தெரிவானோர் விபரம் பின்வருமாறு:-

செல்வி என். அருளானந்தம் மட்டக்களப்பு, திரு. ரி. கோணேசன் பெரியபோரதீவு, திரு. கே. முருகவேல் அச்சுவேலி, செல்வி பி. நந்தினி கோண்டாவில், திரு. எம். சிவகுமாரன் யாழ்ப்பாணம், செல்வி ஆர். சிவமலர் கொக்குவில், செல்வி என். வன்னியசிங்கம் கண்டி, திரு. எஸ். குணசேகரம் கல்முனை, திரு எம். ஐ. மொகமட்சலீம் கல்முனை-4, திரு. எஸ். ரட்ணசிங்கம் கல்முனை-6, திரு. சி. வசிகரன் பருத்தித்துறை, திரு. ஏ. ஜே. எட்வேர்ட் யாழ்ப்பாணம், திரு ரி நாதன் யாழ்ப்பாணம், செல்வி உ. பொன்னம்பலம் நீர்வேலி, செல்வி எஸ். ரமணிமாலா, கொக்குவில், திரு. கே. ரவீந்திரன் யாழ்ப்பாணம், திரு. ரவீந்திரன் வல்வெட்டித்துறை, செல்வி சந்திரவதனு சந்திரசேகரம் கரவெட்டி, திரு. ஏ. சந்திரகுமரன் கரவெட்டி, செல்வி சி. சிவாம்பிகை பருத்தித்துறை, செல்வி கே. விக்கினேஸ்வரி இளவாலை, திரு. எம். ஆர். எம். அஸ்ஹர் ஹந்தஸ்ஸ, திரு. ஈ. எவ். ஆர். ஜெயகுமார் யாழ்ப்பாணம், திரு. கே. பரமேஸ்பரன் மூதூர், செல்வி கே. அன்னலிங்கம் சுன்னாகம், திரு. ஜி. ஜெகநாதன் வட்டுக்கோட்டை, செல்வி சி. ஜே. லெம்பேர்ட் தலைமன்னார் தெற்கு, திரு கே. எஸ். மகாகணபதி வவுனியா, திரு. எம். மனோகரன் பருத்தித்துறை, திரு. ஏ. எஸ். ஆர் பற்றிக் சுன்னாகம், திரு. எஸ். பிரபாகரன் கொடிகாமம், செல்வி என் ரஞ்சனி அச்சுவேலி, செல்வி ரி. என் ராஜசிவசக்தி யாழ்ப்பாணம், செல்வி எம். டி. எஸ் செபத்தியன்பிள்ளை மாதகல், செல்வி வி தட்சணாமூர்த்தி மல்லாகம். செல்வி ஜி. விநாயகமூர்த்தி தெல்லிப்பழை, செல்வி ஏ. வைத்தியலிங்கம் யாழ்ப்பாணம், திரு. ஈ. வசந்தகுமார் யாழ்ப்பாணம், செல்வி என். யசோதா கோண்டாவில், திரு. எம். பிரபாகரன் மானிப்பாய்,

தட்சணாமூர்த்தி வி. காங்கேசன்துறை, விநாயகமூர்த்தி ஜி. தெல்லிப்பழை, சண்முகப்பிரபு, என். கொழும்பு-13, பாஸ்கரன், எம். அளவெட்டி தங்கமயில், பி. வெள்ளவத்தை, விக்கினேஸ்வரன், ஆர். இணுவில், குணராசசிங்கம் என். வசாவிளான், சிவநாதன், ரி. கரவெட்டி, இ. சின்னையா, அச்சுவேலி, சிவமலர் ஆர். கொக்குவில், அருளானந்தம் ஐயாத்துரை யாழ்ப்பாணம், ரவீந்திரன் கே. யாழ்ம்பாணம், சிவகணேசன், கே. வட்டுக்கோட்டை, மணிகரன், ரி. யாழ்ப்பரணம், சயூதன், கே. சாவகச்சேரி, முருகானந்தா, ஏ. காரைநகர் கனகசிங்கம், பி. வல்வெட்டித்துறை, கனகவேல்ராசா, ரி. யாழ்ப்பாணம், அமிர்தலிங்கம் எஸ். வேலணை எம். டி. எஸ். சிவசித்தம்பிள்ளை மாதகல், ரி. ரஞ்சனி கைதடி, கே. லங்கபுத்திரி யாழ்ப்பாணம், எதிர்வீரசிங்கம் மன்னார்-9, இம்மானுவேல், எஸ். வி. கொழும்பு-15, பாலரட்ணம் சாவகச்சேரி, முகமட் முபாரக் கட்டுகஸ்தொட்ட மனோரஞ்சனி, என். யாழ்ப்பாணம், அற்புதராஜா, வி. கல்லாறு, ரட்ணசிங்கம். ஆர். தெகிவளை, அருணாசலம் சுமதி, மாத்தளை, அருணாசலம் சுலோசனா மாத்தளை நவராஜன், பி. எம். யாழ்ப்பாணம், ரட்ணசிங்கம், எஸ். காரைதீவு, கிருபாகரன், எஸ். மட்டக்களப்பு, கந்தையா, எஸ். மட்டக்களப்பு, தவராஜா, ஆர். வட்டுக்கோட்டை, லோகேஸ்வரன், எஸ். ஊர்காவற்றுறை, சர்வானந்தன், எஸ். காங்கேசன்துறை, பரமேஸ்வரன், கே மூதூர், விக்கினேஸ்வரி, கே. இளவாலை விநாயகமூர்த்தி, கே கொக்குவில், விஜேதராஜா, என். மட்டக்களப்பு பகீரதன், எம். உரும்பிராய், முருகவேல், கே. அச்சுவேலி, மனோரட்ண ஜேசுசகாயம் கல்லாறு, முருகுப்பிள்ளை கல்முனை-2, கோகுலதாசன், எஸ். சாவகச்சேரி, மகிந்தினி, வி. முல்லைத்தீவு, பொன்னம்பலம் உமாதேவி நீர்வேலி, சீகார், ஏ. எவ். ஊர்காவற்துறை, சண்முகநாதன், கே. ஊர்காவற்றுறை, சிறிசிவானிஸ், எஸ். அளவெட்டி, ஏ. எஸ். ஆர். பற்றிக்சிவாமி சுன்னாகம், கொன்ஸ்ரென்ஸ் பிரியன் ஜோன்பிள்ளை ஊர்சாவற்றுறை, துரைராஜா, ஜே. கொக்குவில், சிறிதரன், ஏ. ஆனைக்கோட்டை, செல்வரட்ணம் முத்துக்குமார் காரைநகர், சிவகுமார் கணபதிபிள்ளை சாவகச்சேரி' ரவி மன்னன். பி. உரும்பிராய், சிறிதரன் சதாசிவம் யாழ்ப்பாணம்,

## இன்று

(மானிப்பாய்)

மானிப்பாய் இந்து சமய விருத்திச் சங்க ஆதரவில் மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று மாலை சுந்தர மூர்த்தி நாயனார் குருபூசை நடைபெறும்.

## இன்றைய பலன்

மாதம்-ஆடி
திகதி-20[04-08-1984]
வாரம்-சனி
திதி-அட்டமி பின் இரவு 12-05வரை
நக்ஷத்திரம்-சுவாதி பிற்பகல் 4-14வரை

மேடம்:- மனக்கோட்டை கட்டுவீர்கள் எதிர்பார்த்ததில் ஏமாற்றம் விளையும் இன்ப சகோதரத்தின் உடல்நலம் பாதிக்கப்படலாம் அபாயகரமான காரியங்களைத்தவிர்த்துக் கொள்ளவும்.

இடபம்:- போது மென்ற மனத்துடன் செயலாற்று வீர்கள் களஸ்திரவழியால் பெருமைகள் வந்துசேரும் ஆவலுடன் எதிர்பார்க்கும் கடிதமொன்று இன்று கிடைக்கலாம் தொழில்துறையில் வெற்றியும் உண்டு.

மிதுனம்:- உணர்ச்சிமயமானதினம் மனப்போராட்டங்கள் நடைபெறும் உடல் நலம் பாதிக்கப்படலாம் குடும்பத்தில் ஏற்படும் மோதல்கள் விரக்திமனப்பான்மையை உருவாக்கும்.

கடகம்:- நல்லதை செய்வீர்கள் நலன்பெருகும் பிரமுகர்கள் உங்களை தேடிவருவார்கள் சமூகத்தில் மதிப்பு உயரும் அரசியல் வாதிகள் அதிஷ்ட தேவதைகளை அணைத்துக் கொள்வர்.

சிங்கம்:- கலைஉலகம் சம்பந்தப்பட்டவர்களுக்கு புகழ் உயரும் சிலர் புதிய வாகனத்தை கொள்முதல் செய்வதில் கவனம் செலுத்துவர் வாழ்க்கையில்வசந்தம்நிலவும்.

கன்னி:- தூரத்துப் பயணம் துயரத்தைத்தரலாம் பணவிவகாரத்தில் வீழ்ச்சிதென்படும் வைத்தியர்களுக்கு உயர்வுக்கும் இடமுண்டு 'இன்று சிறு வருத்தம் வரினும் பெறுமுறையில் கவனிக்கப்படல் வேண்டும்.

துலாம்:- தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம் பெறும் கவஸ்திரவழியில் பொருள் வரவுக்கு இடமுண்டு, கண்ணியமான நடவடிக்கைகளில் ஈடுபடுவீர்கள் புதியநண்பர்கள் சேர்வார்கள்.

விருச்சிகம்;- போட்டி விவகாரங்களில் பணம் விரயமாகும் ஆணவப் போக்கினால் சந்தர்ப்பம் நழுவவிடப்படலாம் அபிப்பிராய பேதத்துக்கும் இடமேற்படும்.

தனுசு:- அன்புக்கரங்கள் அணைக்கும் அதிர்ஷ்ட தேவதையின் பார்வையும் பதியலாம் தக்க சமயத்தில் தந்தையின் ஆதரவும் கிடைக்கும் குருவின் உபதேசம் வாழ்வுக்கு வழி காட்டியாக அமையும்.

மகரம்:- வெற்றிப்பாதையில் வீறுநடை போடுவீர்கள் தொழில்துறையில் புதியஉற்சாகம் பிறக்கும் எதிரிகள் மத்தியில் ஏற்படும் மனமாற்றம் உங்கள் செல்வாக்கை வளர்க்கும்.

கும்பம்:- கூட்டுவியாபாரத்தால் முன்னேற்றம் உண்டு வெளியூரிலிருந்து திருப்திகரமான செய்தியும் கிடைக்கும் கடமையில் ஆர்வம் பிறக்கும் நிம்மதியான தினம்.

மீனம்:- மனதில் விரக்தி நிலைதென்படும் உடல்நலமும் பாதிக்கப்படலாம் கால்நடைகளினால் நஷ்டம் ஏற்படும் பூமிப்பிணக்குகளின் மூலம் வழக்கு விவாகாரங்களிலும் மாட்டிக்கொள்ள நேரிடலாம்.

திருமலை
வே. ரவீந்திரன்

## கலை - வணிக பட்டதாரி ஆசிரியர் விபரம்

(நேற்றைய தொடர்ச்சி)

எம். அன்ரன் அல்பிரட்-யாழ்ப்பாணம், செல்வி எம். முத்துக்குமாரசாமி - யாழ்ப்பாணம், செல்வி ரதிகுமாரி தியாகராசா - யாழ்ப்பாணம், நாகலிங்கம் யோகராசா-அல்வாய், எஸ். சந்திரமோகன்-யாழ்ப்பாணம், எஸ் சுப்பிரமணியம் மகேந்திரன் - கரவெட்டி, செல்வி சி நடராசா-யாழ்ப்பாணம் செல்வி கல்யாணி பெருமாள் கொழும்பு-13, செல்வி ஜி. சபாரட்ணம் - மட்டக்களப்பு, செல்வி வே. சோமசுந்தரம்-காத்தான்குடி, பி. முத்துலிங்கம்-பெரியபோறதீவு, செல்வி எஸ். முத்துராசா - மட்டக்களப்பு, செல்வி எஸ். ரி. பிள்ளையன்-மட்டக்களப்பு, எஸ். பாலச்சந்திரன்- வாழைச்சேனை ஏ. சி. எம் யக்கோப்-கண்டி, எஸ். எம். றிவைய்-பாசல, செல்வி எம். எச். சுகாரா-கேமற்றகம, ஏம். ஆர். எம். நவீல்-மாவனல்ல, செல்வி ஏ. மல்லிகா - வலந்தீனா முள்ளியவளை, எம். சிவராசா-முல்லைத்தீவு, வி. பரராசசிங்கம்-முல்லைத்தீவு. எஸ் சிவனேஸ்வரன் துணுக்காய், ஆறுமுகம் தியாகராசா - றத்தோட்ட, எம். யுனைட்-சிலாவத்துறை, ஏ. எச் முகமட் சியாட்-பலாங்கொட, கனகசபை கஜேந்திரா மூதூர்; என். ஜமால்டீன்-அக்கரைப்பற்று, யோசப் சகாயநாதன்-கல்முனை, செல்வி யசோதரா விஜயரட்ணம்-பொத்துவில், எம். பி. ஏ ஹமீட்-நிந்தவூர், செல்வி ஜி. வி. அருளையா - கல்முனை, செல்வி பி. எஸ், விகுராடு-மன்னார், வி. செல்வராசா-நுவரெலியா, என். பாலச்சந்திரன்-கிளிநொச்சி, செல்வி ஏ. கே. ஞானப்பிரகாசம்- கிளிநொச்சி, எம். எச். எம். சகாறியா-ஹிங்குல. எஸ். மயில்வாகனம் - துறைநீலாவணை, செல்வி எம். செல்லையா-சண்டிலிப்பாய், செல்வி அடைக்கலமேரி றேஸ் பிலோமினா மரியாம்பிள்ளை-தும்பளை, பருத்தித்துறை, செல்வி விக்கினேஸ்வரி வேதநாயகம்-வடகோப்பாய், செல்வி ஜெயந்தி தர்மலிங்கம்-நல்லூர், செல்வி யசோதா கணபதிப்பிள்ளை-அல்வாய், செல்வி றஞ்சினி திருநாவுக்கரசு-கரவெட்டி, செல்வி உசா நாகலிங்கம்- அளவெட்டி. செல்வி பிறேமவதி வேலுப்பிள்ளை-தெல்லிப்பழை செல்வி கே. றஞ்சனி-தெல்லிப்பழை, செல்வி விக்னேஸ்வரி செல்வநாயகம் - பருத்தித்துறை, செல்வி ராஜேந்திர மலர் செல்லத்துரை - அச்சுவேலி, கனகரட்ணம் வேல்சிவநாதன் - தெல்லிப்பழை, செல்வி இரஞ்சிதம் போல்-கரவெட்டி, திருமதி கனகதேவி ஜெயராஜ் - யாழ்ப்பாணம், செல்வி ஏ, செல்வராணி- இளவாலை, செல்வி சாந்தாராணி பொன்னுசாமி - தொண்டமானாறு, திருமதி டபிள்யூ. நவமணி - கோண்டாவில், செல்வி மகாலச்சுமி கணேஷ்-உடுப்பிட்டி, செல்வி சிவகுமாரி தங்கராசா- அல்வாய், ஏ.எஸ். யோகராசா - மட்டக்களப்பு, செல்வி கே. சிவகுரு-கஞுவாஞ்சிக்குடி- திருமதி ரி. யுவராஜினி-கல்லாறு, கே. பவளேந்திரன்-மண்டூர், செல்வி எஸ். சிவபவானி-கிரான், எஸ். சிவநிர்த்தானந்தா-கிரான், திருமதி எஸ். இராசரட்ணம்: களுவாஞ்சிக்குடி, செல்வி ஜி. பராசக்தி-திருமலை, செல்வி பி. சரவணமுத்து-திருமலை, வி. பாலசுப்பிரமணியம் - வரணி, செல்வி ஜி. ஞானப்பிரகாசம்-யாழ்ப்பாணம், செல்வி எஸ். வன்னியசிங்கம்-கைதடி, எம். உதயகுமாரன்-சுன்னாகம், என். துரைராசசிங்கம்- தெல்லிப்பழை, வி. தர்மதாசன்-காரைநகர், எஸ். ஜெயவீரசிங்கம்-யாழ்ப்பாணம், திருமதி கே. ரட்ணகுமார் - வேலணை, செல்வி ஜே. நடராராசையர்-யாழ்ப்பாணம், எம். சிறீகிருஷ்ணன்-தெல்லிப்பழை, வேலன் சுந்தரலிங்கம்-சாவகச்சேரி, ஏ. இராமநாதன் கரவெட்டி, செல்வி ராஜனி அம்பலவாணர் - பருத்தித்துறை, செல்வி எஸ். கனகரட்ணம்-தெல்லிப்பழை, ஆறுமுகசாமி குமாரவேல் - வல்வெட்டித்துறை, ஆர்.சோதிநாதன்-சுன்னாகம், செல்வி எஸ். தனலட்சுமி-நயினாதீவு, திருமதி கமலவேணி யோகேஸ்வரன்-கொக்குவில், செல்வி கலாதேவி சதாசிவம் யாழ்ப்பாணம், திருமதி ஐ. கோப்பெரும்தேவி - யாழ்ப்பாணம், ஐ. தயானந்தராசா-புங்குடுதீவு, ரி. மகேந்திரராசா- அச்சுவேலி, எஸ். சுதந்திரதேவி-பண்டத்தரிப்பு, செல்வி தேவராணி இராஜதுரை - கொக்குவில், எம். எஸ். அமரசிங்கம்-கரவெட்டி, லொயிஸ் ராஜநாயகம்-மிருசுவில், மார்க்கண்டுஆறுமுகசாமி-தாளையடி, செல்வி வி. விஜயசுந்தரன் -கரவெட்டி, எஸ். புஷ்பலிங்கம்-வல்வெட்டித்துறை, செல்வி விமலா பொன்னன் - கொடிகாமம், இராசையா சத்தியானந்தம்-கோண்டாவில், செல்வி ஜே. செந்திவேல்-அளவெட்டி, எம். நரேந்திரன்-கொடிகாமம், செல்வி எஸ். செல்வராணி - அளவெட்டி, திரு. பி. மனோகரன்-யாழ்ப்பாணம், திரு. தம்பித்துரை ரட்னராசா - கொக்குவில், செல்வி தேவகல்யாணி நல்லையா சுழிபுரம்,


✶ தூய அலுமினியம் ✶ பிளாஸ்டிக்
✶ எவர் சில்வர் ✶ எனமல்
✶ கண்ணாடி ✶ தாச்சி வகைகள்
✶ ஒக்கிட் (ORCHID) வாளிகள்

போன்ற பொருட்கள்,
மங்கள வைபவங்களுக்கு உகந்த
அன்பளிப்புப்பொருட்கள் யாவும்
குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கு எமது உற்பத்திப் பொருட்களும், மற்றும் எனமல், பிளாஸ்டிக், ஒக்கிட் வாளிகளும் விசேட கழிவுடன் வழங்கப்படும்.

உங்கள் வசதி கருதி ஹோம் பினன்ஸ் சொகுசு பஸ் ஆசனங்கள் எம்மிடம் பதிவு செய்து கொள்ளலாம்.

நியூ லங்கா
அலுமினியம் தொழிற்சாலை
(விற்பனைப் பிரிவு)
இல. 6, 30, ஆஸ்பத்திரி வீதி, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
போன்: 23596


## ரூபவாஹினி

மாலை

5-30 பிஜன் ஸ்ரீட் (ஆங்கிலம்)
5-45 நியூ ஸ்பைடர்மான் (ஆங்கிலம்)
6-15 சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம்)
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 'ஜெமினி' (ஆங்கிலம்)
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 நாடகம் (சிங்களம்)
9-05 இசை நிகழ்ச்சி (சிங்களம்)
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 சோவியத் நடன நிகழ்ச்சி
10-30 உலகச் செய்திகள்
10-35 சோவியத் நடன தொடர்ச்சி
11-15 நிகழ்ச்சிகள் முடிவு

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி - சரோஜாதேவி
**என் தம்பி**

**சாந்தி** (யாழ். நகர்)
10-30, 2-30, 4-45, 7-00
BAD BLOOD
Action-Adults Only
திகிலூட்டும்மர்மச்சித்திரம்

**மனோகரா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 4-15, 7-00
Sean Connery in
DIAMONDS ARE FOREVER
(007)
(Color)

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
முத்துராமன்-காஞ்சனா
**காதலிக்க நேரமில்லை**
(ஈஸ்மன் கலர்-புதிய பிரதி)

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
எம்.ஜி.ஆர் -சரோஜாதேவி
**பெற்றால்தான் பிள்ளையா**

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30.
சிவகுமார்- ஜெய்சித்திரா
விஜயகுமார்
**பொண்ணுக்கு தங்கமனசு**

Now Showing
**றீகல்** (யாழ். நகர்)
10-30, 2-15, 4-30, 6-30
RAQUEL WELCH
**HANNIE CAULDER**
Action-Adults
Cowboy Film
தன்னைக் கெடுத்தவர்களையும், தன் குடும்பத்தை அழித்தவர்களையும், தனித்து நின்று பழிவாங்கும் ஒரு பெண்ணின் வீர காவியம்.

**வின்சர்** (யாழ். நகர்)
தினசரி 10-30. 2-30, 6-30
எம். ஜி. ஆர்.-சாவித்திரி
வீரப்பா - சந்திரபாபு
**மகாதேவி**
(புத்தம் புதிய பிரதி)

**லிடோ** யாழ். நகர்
Daily
10-30, 2-00, 4-30, 7-00
THE BURNING

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
ரஞ்சன்-டி.ஆர்.ராஜகுமாரி
**சந்திரலேகா**
[புதிய பிரதி]
அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க பல வருடங்களுக்குப் பின் திரையிடப்படுகிறது.

## கல்விச் சுற்றுலா

[மன்னார்]

மன்னார் மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கல்வி உத்தியோகத்தர்கள் யாழ் மாவட்டத்திற்கு கல்விச்சுற்றுலா ஒன்றை மேற்கொண்டனர்.

இக் கல்விச் சுற்றுலா மன்னார் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. எஸ். ஞானப்பிரகாசம் தேசியகூட்டுறவுசபையின் மன்னார் மாவட்ட செயலாளர் திரு பி. சண்முகசுந்தரம், கூட்டுறவு இலாகா கல்வி விரிவாக்க உத்தியோகத்தர் ஜனாப் என். முகமட்அலி ஆகியோர் தலைமையில் இடம்பெற்றது.

இக்கல்வி சுற்றுலாவின் போது மன்னார் மாவட்ட பலநோக்கு கூட்டுறவுச்சங்க கல்வி உத்தியோகத்தர்கள் யாழ் மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் இடம் பெறும் கல்வி வேலைத் திட்டங்களைப் பார்வையிட்டனர்.

வருக! வருக!
★ 3 பேஸ் 1 பேஸ் வயரிங் வேலைகள்
(பொயின்ருக்கு ரூபா 35/-மட்டுமே)
★ ரான்ஸ் போமர், மோட்டர் றீவைண்டிங்
★ சகல மின் உபகரணங்களும் பழுது பார்த்தல்
உத்தரவாதத்துடன் செய்யப்படும்.
**ஒமேகா,** கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்
(யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகில்)

## விற்பனை

### மத்திய மின்சார நிலையம், சுன்னாகம்

கழிவு எண்ணை 64 றம்கள் றம்முடன் (210 லீட்டர்) விற்பனைக்குள்ளன. எண்ணைக்கும் றம்முக்குமாக கேள்விப்பத்திரங்கள் பதிவுத்தபால் மூலம் 20-8-84க்கு முன் அனுப்பப்படவேண்டும். 21-8-84 காலை 10-00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் பரிசீலனைசெய்யப்படும்.

அறிவித்த திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் முழுக் காசும் கட்டிச் சாமான்களை எடுக்கவேண்டும். மேலதிக விபரங்களுக்குக் காரியாலய நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

நிலையப் பொறுப்பதிகாரி
மத்திய மின்சார நிலையம்,
இலங்கை மின்சார சபை,
சுன்னாகம். 1178

## வெற்றிடம்

### "ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்"

எமது கிளிநொச்சி அலுவலகத்தில் கடமையாற்ற பின்வரும்பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ எழுதுவினைஞர் / விற்பனைப் பிரதிநிதி
★ டைப்பிஸ்ட் (தமிழ் / ஆங்கிலம்)
★ ஆபிஸ் பையன் (பியோன்)

கிளிநொச்சிப் பிரதேசத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.
எதிர்வரும் 15-8-1984-ம் திகதிக்கு முன்னர்

முகாமையாளர்,
**"ஷப்ரு" யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்,**
கண்டி வீதி, கிளிநொச்சி.
என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

தெல்லிப்பழை வீமன்காமம் 1. ஆழ்வாப்பிள்ளை திருஞானமும்
2. பெண் சகுந்தலாராணியும்
வழக்காளிகள்

எதிராக

இல. ஈடு 4803

வேலணை, வேலணை கிழக்கு நடராசபிள்ளை பிரணவ சொரூபம்

எதிராளி

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டில் ஈடு/4803 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1984 ஆம் ஆண்டு ஆகஸ்டு (ஆவணி) மாதம் 15 ஆம் திகதி (15 - 8 - 84) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் முறையே அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 11520/-ம், இதில் ரூபாய் 6000/-க்கு 7 - 7 - 82 திகதி தொடக்கம் 23 - 5 - 83 திகதி வரைக்கும் 100 க்கு 24 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100 க்கு 12 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 4495-50 சதம்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி வேலணைக் கோவிற்பற்று வேலணை கிழக்கிறை "நித்திவயல்" நெ. பர. பத்தொன்பது [19] குளி நாலு [4] எல்லை கிழக்கு இராமச்சந்திரன் பெண் இராசம்மாவின் ஆதனம். வடக்கு கந்தையா விசுவலிங்கத்திற்குரிய ஆதனம். மேற்கு புவன நாயகியம்மாவுக்கும் இராமலிங்கம் பெண் நல்லம்மாவுக்கும் பொன்னையா கைம்பெண் பராசத்திக்கும் நடராசா பெண் நாகம்மாவுக்குமுரிய ஆதனங்கள். தெற்கு இலந்தைக்காட்டுப் பிள்ளையார் கோவிலாதனம் இதனடங்கலும்.

C 493/143

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்.

தெல்லிப்பழை,
20 - 6 - 1984 1206

## வானொலியில் இன்று

காலை
5-30 நாதாஞ்சலி
5-35 தோத்திரமாலை- வெங்கடேச சுப்பிரபாதம்
6-00 சைவநற்சிந்தனை
6-05 கத்தோலிக்க நற்சிந்தனை
6-10 அறநெறிஆரம்
6-25 நிகழ்ச்சி முன்னோட்டம்
6-30 செய்திகள்
6-40 அறிவிப்புகள்
6-50 மெல்லிசைப் பாடல்
6-55 போதிமாதவனின் போதனைகள்
7-00 ஆங்கிலபாடம்
7-30 மாகாணச் செய்திகள்
7-35 இசையமுதம்
8-15 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
8-45 தாளவாத்தியக் கச்சேரி
9-15 தமிழ்மூலம் சிங்களம் என். டி. பீரீஸ்
9-30 நாட்டுப்பாடல் கே, ஆர். நடராஜா
9-45 தகவல்- எஸ். ஜி. என் புஸ்பரத்தினம்
10-00 சங்கமம்
10-30 கதைப்பாட்டு பேராசைபெருநட்டம் கு. ராமச்சந்திரன்
10.45 அகில இந்திய வானொலி நிலைய ஒலிப்பதிவு
11-30 மாணிக்கமாலை
11-58 பகல் ஒலிபரப்புமுடிவு

மாலை
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 ஞானக்களஞ்சியம்
6-30 இசைப்பயிற்சி
6-45 மயவின்யாசம்

இரவு
7-00 நாட்டுக்கூத்து யாழ்ப்பாணத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்டது
7-30 உலகச் செய்திகள்
7-40 மெல்லிசைத் தேர்வு ப. முத்தழகு
7-45 செய்திச் சுருள்
8-00 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
9-00 செய்திகள்
9-10 செய்தியின் பின்னணியில்
9-15 அறிவிப்புகள் பக்திப்பாடல்கள்
9-30 நாடகம்- 'ஒரு காதல் கனிகிறது' அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை
10-00 நாதஸ்வர ப்ருந்த கானம் ஆர். வி. செல்வராஜா
10-30 ஹிந்திபஜன்
11-00 ஒலிபரப்புமுடிவு


## பிறந்த நாள் வாழ்த்து



செல்வன் த. தீபன்

யாழ்ப்பாணம் சிறும்பியடியைச் சேர்ந்த தங்கராஜா விஜயகுலராணி தம்பதிகளின் செல்வப் புதல்வன் தீபன் தனது 4-வது பிறந்த நாளை இன்று (4-8-84) கொண்டாடுகிறார். பெற்றோர் உற்றார், உறவினர் இவரை இறைவன் அருள் பெற்று பல கலைகளும் கற்று அன்பிலும், பண்பிலும், அறிவிலும் சிறப்புற்று பல்லாண்டு காலம் வாழ்கவென்று வாழ்த்துகிறார்கள். 1164

## ஓராண்டு நினைவஞ்சலி



குருசாமி
கருணாகரன்
(ஜாயா)
(ஜேர்மனி)

மலர்வு :
18-04-1952

உதிர்வு :
04-08-1983

மறைந்தாய் நெஞ்சில் மறையவில்லை,
சுமந்தாள் நெஞ்சச் சுமை குறைந்தபாடில்லை,
அழுது புலம்பியும் மாண்டனீ வருவாயோ.

சகோதரர், சகோதரிகள், மாமன்மார், மாமிமார், மைத்துனிமார், உடன்பிறவா சகோதரர், உற்றார், உறவினர், நண்பர்கள் (ஜேர்மன் வாழ்).
113, கண்டி வீதி, 1209

கலர் பிலிம் சுருள்களை Processing & Printing, 24 படங்களுக்குக் குறையாது செய்து கொண்டால், ஒரு கலர் பிலிம் சுருள் இனாமாக வழங்கப்படும், Processing ரூபா 30/- Printing. P.C ஒருபிரதி ரூபா 6.50,
**கொழும்பு ஸ்ருடியோ**

# தமிழ்மொழி அமுலாக்கல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிளைத்தலைவர்கள் தங்களுக்கு இருக்கும் சிக்கல்களைச் சுட்டிக் காட்டினர். அலுவலக உதவியாளர், தமிழ்சுருக்கெழுத்தாளர், தட்டச்சாளர், தட்டச்சு இயந்திரங்கள், உபகரணங்கள் ஆகியன பற்றி எடுத்துரைத்தார். கூட்டத்தில் தரப்பட்ட கருத்துக்களும் ஆலோசனைகளும் நன்கு ஆராயப்பட்டு பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

ஒவ்வொரு பதவி உத்தியோகத்தர்களும் கிளைத்தலைவர்களும் தம்மால் இயன்ற அளவு சுற்று நிருபத்தில் காட்டியவாறு தமிழ் மொழி அமுலாக்கலைச் செயல்படுத்த வேண்டும்.

மாவட்ட செயலகத் தேவைக்கு வேண்டிய சுருக்கெழுத்தாளர், தட்டச்சுப் பொறி இயந்திரம், தட்டெழுத்தாளர், தளபாடங்கள் ஆகியன பெறுவதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

தற்பொழுது பாவனையில் இருக்கும் தமிழ் தட்டச்சு இயந்திரங்களை கணக்கிட்டு பாவனைக்குதவாதவையாயின் அவற்றைப் பழுதுபார்த்தல் வேண்டும்.

தற்பொழுது பாவனையில் இருக்கும் பொதுப் படிவங்கள், நடைமுறைப் படிவங்கள் அனைத்தும் தமிழ் மொழியில் இல்லாததாயின் அவற்றைத் தமிழ்மொழி ஆக்கம் செய்தல் வேண்டும்.

தமிழ்மொழி அமுலாக்கத்தைத் துரிதப்படுத்தும் முகமாகவும் வேலைகளைக் கண்காணிப்பதற்காகவும் ஓர்தமிழ் தட்டச்சுப் பொதுப் பிரிவு ஒன்றை செயலகத்தில் ஏற்படுத்தி அப்பிரிவை தற்போது சேவையில் இருக்கும் உயர் வகுப்பு தட்டச்சு எழுத்தாளரின் கண்காணிப்பின் கீழ் கொண்டுவருதல் வேண்டும்.

இதே விடயம் பற்றி பிரிவு உதவி அரசாங்க அதிபர்களோடும் கடந்த 30-07-84-ல் விரிவாக ஆராயப்பட்டு யாழ். மாவட்டபிரிவு உதவி அரசாங்க அதிபர்கள் பின்வருமாறு பணிக்கப்பட்டுள்ளார்கள்.

அலுவலகங்களில் ஏற்புடைத்தாய சகல வேலைகளும் தமிழ்மொழியில் செயற்படுத்தப்பட வேண்டும்.

அலுவலகங்களுக்குத்தேவையான தமிழ் தட்டெழுத்தாளர்கள், இயந்திரம் ஆகியனபற்றி எதிர்வரும் 3-ம் திகதிக்கு முன்னர் அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

தமிழ் மொழி பெயர்ப்புத் தேவையான படிவங்களின் விபரங்களை அரசாங்க அதிபருக்கு ஒருவார காலத்தில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

பிரிவு உதவி அரசாங்க அதிபர்கள், தங்களுக்குச் செயலகத்தில் இருந்து அனுப்பப்படும் கடிதங்கள் சில. இன்னும் ஆங்கிலத்தில் அனுப்பப்படுவதாகவும் அவற்றைத் தமிழ்மொழி மூலம் அனுப்புதல் பொருத்தமானது எனவும் சுட்டிக்காட்டினர் இக்கருத்திற்கு மேலதிக அரசாங்க அதிபர்தான் கூடிய கவனம் செலுத்துவதாகவும், படிவங்கள், ஆவணங்கள் தமிழ்மொழிதெரியாத அல்லது குறைந்த அளவு தமிழ்மொழி அறிவுள்ள மேல் இடங்களுக்கு அனுப்பப்படும்போது ஆங்கிலமொழி பெயர்ப்பலகையையும் அல்லது ஆங்கில பதங்களை இடையே பாவித்து அனுப்புதல் நன்று எனவும் ஆலோசனை கூறினர். [கி]

---

## மரண அறிவித்தல்

### சிவக்கொழுந்து கணபதிப்பிள்ளை

(கட்டட கொந்தருத்துக்காரர்)

அராலி கிழக்கு வாலை அம்மன் கோவிலடியைச் சேர்ந்த சிவக்கொழுந்து கணபதிப்பிள்ளை 3-8-84 இல் காலமானார். இவர் சரசுப்பிள்ளையின் அன்புக் கணவரும், மார்க்கண்டு, காலஞ்சென்ற கந்தையா இலட்சுமி, ஆச்சிப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும், சிவரத்தினம், பஞ்சரத்தினம், பொன்னுத்துரை, சத்தியானந்தம், தங்கராணி ஆகியோரின் அருமைத் தந்தையும், நாகரத்தினம், மகுளம்மா, தணிகாசலம் ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமைக் கிரிகைகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று அராலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

1221

---

## மரண அறிவித்தல்

### வைரமுத்து இராமலிங்கம்

(சொர்ணஞானலிங்கம்)

சுதுமலையைச் சேர்ந்த வைரமுத்து இராமலிங்கம் (விற்பனைத்திணைக்கள கணக்குப் பரிசோதகர்) காலமானார். சுந்தரலக்ஷ்மி (ஆசிரியர் மானிப்பாய் மகளிர் கல்லூரி)யின் அன்புக் கணவரும், நளின் (சாட்டற் அக்கவுண்டற்), ஜெயந்தா, முரளி, சுமதி, சுரேஷ் ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலினியின் மாமனாரும், பார்வதிப்பிள்ளை, திருஞானலிங்கம், சிவஞானலிங்கம், சுந்தரலிங்கம் (Kenya) ஆகியோரின் சகோதரரும், பொன்னுத்துரையின் மைத்துனருமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (4-8-84) நடைபெற்று மாலை 4 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக பிப்லி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும் -'ஜமுனா' சுதுமலை.

1222

---

## மரண அறிவித்தல்

### B. M. சவரிமுத்து

(இளைப்பாறிய மக்கள் வங்கி, முகாமையாளர்)

B.M.சவரிமுத்து காலமானார். இவர் காலம் சென்ற மரியாம்பிள்ளை ரேசம்மா (பொன்னுட்சி)யின் மூத்த புதல்வரும், திரேசாவின் அன்புக்கணவரும், யசிந்தா, பபி காலம் சென்ற ஜெயா, ஜோய், ஜொய்சி, இந்திராணி, றஞ்சினி, றஞ்சன், ரெய்ஸ், ஜெயராணி, ஆகியோரின் அன்புத் தந்தையும், றெஜினா, டெய்சி, B M. அன்ரனிப்பிள்ளை ஆகியோரின் அருமைச் சகோதரனும், விக்ரர், சாந்தி, செலின் ஆகியோரின் மாமனாரும், P.S.இறிஸ்சோஸ்ரம், F சூசைப்பிள்ளை, வேர்ஜின், மலர், ஜேக்கப் ஆகியோரின் மைத்துனரும், நவீன், இனக்ஷி, மேவின், கரோலின் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக (04-08-84) சனிக்கிழமை மாலை 4 மணிக்கு புனித சொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தயவுசெய்து இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

51 கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

1217

---

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.

## தோழமையும்

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

நாயனார் இறைவர் தமக்குச் செய்த திருவருட் பெருமையால் தருக்கி நின்றார்போலத் தோன்றும். ஏனெனில் நாயனாரது நிலையை நம்மனோர் அறிதல் எளிதன்று.

இறைவன் எவ்வளவுக்கெவ்வளவு அடியவர்க்கு எளியனாய் வருகின்றானோ அவ்வளவுக்கவ்வளவு அவ்வடியவர் முனைப்பு அற்ற நிலையில் உள்ளார் என்பதே உண்மை. அதனால் சுந்தரருக்கு எளிவந்ததுபோல் பிறருக்கு எளிவந்ததில்லை என்றால் சுந்தரரைப்போல் தன் முனைப்பு நீங்கினவர் இல்லை என்பது தான்பொருள் பொன் வேண்டிப் பாடியவை......சுந்தரரது தேவாரத்திற்கு உள்ள சிறப்பாதல் பற்றி அவையே அவரது திருப்பதிகங்களில் உள்ளன போலத் தோன்றினும் அவரது உண்மைநிலையைத் தெளிவாகப் புலப்படுத்தும் பகுதிகளும் பல காணப்படுகின்றன.

''மற்றுப் பற்றெனக் கின்றி நின் திருப்பாதமே மனம் பாவித்தேன்''

''நான் மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே''

''பிழைப்பனாகிலும் திருவடிப் பிழையேன்''

''திருவும் மெய்ப்பொருளும் செல்வமும் எனக்குன் சீருடைக் கழல்கள்''

என்றாற் போலும் பகுதிகள் நாயனாரது சிவபக்தியின் உறைப்பினை உணர்த்தும்.

## புதுமைகள்—

(5ம் பக்கம் பார்க்க)

களுக்கும் கூட வேண்டற்பாலது. துன்பமும், துயரமும் தேவைகளும் அதிகரித்துவரும் எம்மவர்க்கு அன்னையின் திருவிழாக்காலம், ஆறுதலும். திடமும் அருளும் பெறுகின்ற மகிழ்வான காலமாகும்.

## ஈழநாடு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் எனும் விலாசத்துடன் இன்றுமுதல் தொடர்பு கொண்டு நிதி உதவிகளை தாராளமாக அளிக்கலாம்.

## நீதிமன்ற ஊழியர்கள் நிதியுதவி

வேலணை ஆரம்பநீதிமன்ற ஊழியர்களும் இந்நிதிக்கு 170 ரூபாவை நேற்று வழங்கினார்கள்.

## வங்கி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லயத்தை நோக்கி இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், அங்கு காவலிலிருந்த பாதுகாப்புஊழியர்கள் திருப்பிச்சுட்டபொழுது இனம்தெரியாத நபர்கள் தலைமறைவாகிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேஇரவு 10-30 மணியளவில் மீண்டும் ஸ்டான்லி வீதியிலுள்ள மக்கள் வங்கிக் கிளையில் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

இதனால் இவ்வங்கிக் கிளைக் கட்டிடத்தின் பெயர்ப்பலகை மேல்மாடி கிழக்குப்பகுதியின் முன்பக்க ஜன்னல்கண்ணாடிகள், கீழ்ப்பகுதி இரும்புக் கதவு, வங்கி உள்ளேயிருந்த மேசை, தொலைபேசிகள், கதிரைகள், மற்றும் மேசைகள் வங்கி மனேஜரின் அறை ஆகியன சிதைந்து நொறுங்கியும் இருக்கக் காணப்பட்டன.

குண்டுவெடிப்பு அதிர்ச்சியினால்வங்கிஆவணங்கள்வைக்கப்பட்டிருந்த இரும்புப் பெட்டிகளும் பாதிக்கப்பட்டிருந்தன.

அதே நெரத்தில் நேற்றுக் காலை தோடக்கம் வங்கிக் கிளைக்கட்டிடத்தின் சேதமுற்ற பகுதிகளின் திருத்த வேலைகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஆனாலும் வங்கிக்கிளையில் வேலைகள் எதுவும் நேற்று நடைபெறவில்லை.

இம்மாதம் 6-ம் திகதி தொடக்கம் இக்கிளையில் வேலைகள் வழமைபோல் நடைபெறும் என்று வங்கி உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஸ்டான்லி வீதியிலுள்ள இலங்கை வங்கிக் கிளையின் முன்னால் ஒருகுண்டு வெடித்த போதிலும் கட்டிடத்துக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

குண்டுவெடிப்பினால் ஏற்பட்ட சேதங்களை யாழ். பொலிஸ் அதிபர் ரி.கனகரத்தினமும், உதவிப் பொலிஸ் அதிபர் மனோகரனும் சென்று பார்வையிட்டனர். இராணுவத்தினர் கவச வண்டிகளில் இப்பகுதியில் ரோந்து சுற்றினர்.

(மா)

## நல்லூர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

''செட்டித் தெரு ஒழுங்கை வரையுள்ள செட்டித் தெருவின் அப்பாகத்தை

''பஸ், மினிபஸ்கள் மற்றும் சுமை கூடிய வாகனங்கள் ஆனைப்பந்திச் சந்தியிலிருந்து 2ம் கட்டை வீதியூடாகச் செல்லாமல் கச்சேரி நல்லூர் வீதியூடாகச் சென்று முத்திரைச் சந்தியிலிருந்து பருத்தித்துறை வீதிக்குச் செல்லவும், பருத்தித்துறை வீதியால் வரும் வாகனங்கள் முத்திரைச் சந்தைச் சந்தியில் திரும்பி கச்சேரி நல்லூர் வீதி, நாவலர் வீதியூடாக யாழ்ப்பாணத்தை வந்தடையவும் நடவடிக்கை எடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. (குறிப்பிட்ட இடங்களில் விளம்பரப் பலகை போடப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது) இத்துடன் நாவலர் வீதியிலுள்ள தொலைத்தொடர்புத் திணைக்களத்தினால் வெட்டப்பட்ட கிடங்குகள் முற்றாக மூடப்பட்டு பஸ் போக்குவரத்துக்கு ஏதுவாகத் தார் போடப்பட வேண்டுமென்று தீர்மானிக்ப்பட்டது. குறிப்பிட்டபகுதியில் வீதியின் இருமருங்கிலும் கட்டிடப்பொருட்கள் ஏதும் சேகரித்து வைப்பதை தவிர்ப்பதற்கு மராமத்துப் பகுதி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

''திருவிழாக்காலங்களில் கோவிலுக்கென பிரத்தியேக பஸ் சேவைகளை விடவேண்டுமென இ. போ. சபையைக் கேட்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. (மா)

## மாண்டவர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுவருகிறது.

இலங்கையிலிருந்து அபுதாபிக்குசெல்லவிருந்த 25 பயணிகளும் இந்த விபத்து இடம்பெற்றபோது அங்குஇருந்தார்கள். சென்னை சுங்க இலாகா, விமானநிலைய அலுவலர்களும் அங்கு இருந்தார்கள். இந்த விபத்தில் சுங்க இலாகா அதிகாரிகளும் இறந்திருக்கலாமென்று அஞ்சப்படுகிறது.

### ஒருவரின் சடலமே அடையாளம் காணப்பட்டது

உயிரிழந்தவர்களில்ஒருவரின் சடலமேஅடையாளம் காணப்பட்டுள்ளது. சர்வதேசவிமான போக்குவரத்து அலுவலகத்தின் தீயணைக்கும் படையைச் சேர்ந்த ஜேசுதாசனுடையதே அந்தச் சடலமாகும்.

இடிபாடுகளுக்கிடையே மேலும்பல சடலங்கள் சிக்கியிருக்கக் கூடுமென அஞ்சப்படுகிறது. இடிபாடுகளை அகற்றும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

### முதலமைச்சர் பார்வையிட்டார்

தமிழ்நாடு ஆளுநர் திரு எஸ்.எல்.குரானாவும், முதலமைச்சர் திரு எம்.ஜி.ராமச்சந்திரனும் நேற்றுக்காலை சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திலுள்ள சர்வதேச பயணிகள் தங்கும் அறைக்குச் சென்று, குண்டு வெடிப்பு சம்பவம் இடம் பெற்ற இடத்தைப் பார்வையிட்டனர்.

ஆளுநர் சென்னை பொது மருத்துவ மனைக்குச் சென்று அங்கு சிகிச்சைபெற்று வருபவர்களைப் பார்வையிட்டார். தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி.ஹண்டேயும் அவருடன் சென்று பார்வையிட்டார்.

ராயப்பேட்டை மருத்துவமனையில் இச்சம்பவததில் காயமடைந்த 15 பேர் சிகிச்சை பெற்று வருவதாகவும் கூறப்பட்டது.

இந்த வெடிகுண்டு விபத்து சம்பவம் மனித நாகரிகப்பண்பிற்குப் புறம்பானதென்று தமிழ்நாடு ஆளுநர் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

### ரூ. 30 லட்சம் சேதம்

இந்த வெடிகுண்டுச் சம்பவத்தினால் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு 30 லட்சம் ரூபா சேதமேற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

பூனாவிலிருந்து வந்துள்ள வெடிகுண்டு நிபுணர்கள் இக்குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக ஆராய்ந்து வருகின்றனர்.

நேற்று கொழும்பிலிருந்து திருச்சி வந்த 'ஏயர்லங்கா' விமானம் திருச்சியிலிருந்து உடனடியாகவே கொழும்பு திரும்பியதாகவும் கூறப்பட்டது.

சென்னை மீனம் பாக்கம் விமான நிலையத்தில் குண்டொன்று வைக்கப்பட்டிருப்பதாக நேற்று முன் தினம் பிற்பகல் 3 மணிக்கு அனாமதேய தொலைபேசி அழைப்பொன்று வந்ததாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

### ஜே. ஆர். அதிர்ச்சி

சென்னை விமான நிலையத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்திற்கு அதிர்ச்சி தெரிவித்து ஜனாதிபதி திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தனா இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார்:

ஜனநாயகத்தைப் பேணிவருகின்ற இலங்கை, இந்தியா ஆகிய இருநாடுகளும் பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராடுவதில் ஒத்துழைக்க வேண்டுமென்று ஜனாதிபதி ஜெயவர்த்தனா அச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

(முன்வந்தசெய்தி மூன்றாம் பக்கம்) (வெ)